2006, புரட்டாதி 01-15 பக்கங்கள் 12
விலை 12/=
Registered as a News Paper in Srilanka.

# தமிழ் அலை

மாதமிரு மலர்

*The Tamil Alai.*

இப்பொழுது மாதமிருமுறை வெளிவருகின்றது தமிழ் அலை


அலை 15 இதழ் 01

SRILANKA NATIONAL TAMIL NEWS PAPER

பொதுசன நூலகம்
20 SEP 2006
மாநகர சபை
யாழ்ப்பாணம்.




## அடக்கப்பட்டுவரும் தமிழ் மக்களின் உண்மையான உரிமைக்குரல் நாங்கள்தான்



## நிரந்தர அரசியல் தலைமைத்துவத்தை நோக்கி



## தோல்விகளுக்கு காரணம் தேடும் பிரபா குழு



## தமிழர் விடுதலையின் முதல் நிபந்தனை



## மத்திய கிழக்கு யுத்தத்தில் வென்றது யார்?

யதார்த்தம் உணரப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்படும் வரை ஓயாத அலையிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த பிரபா குழு உறுப்பனர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கிழக்குமாகாண அரசியல் தலைமைக் செயலகமான மீனகத்தில் 30.08.2006 காலை 11.15 மணியளவில் பிரபா குழுவின் அமைப்பிலிருந்து சரணாகதி அடைந்த ஐந்து பிரபா குழு உறுப்பினர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், யுனிசப் பிரதிநிதிகள், மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகள் முன்னிலையில் மீனகம் பிரதிநிதிகளினால் ஐந்து பேர்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பிரதிநிதி மாசலிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஒப்படைக்கப்பட்ட இவர்கள், சிவம் பரனிதரன்(வயது 27) ஜானசேகரம் கஜேந்திரன்(வயது 19) பழனிநாதன் சசிகரன்(வயது 16) இராசலிங்கம் ஜெயச்சந்திரன்(வயது 19) வாவா கண்ண்ன்(வயது 15) ஆவர்.

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி தாக்க முயன்ற பிரபா குழு கடற்புலிகள் மீது அதிரடித் தாக்குதல். நால்வர் பலி, ஒருவர் மடக்கிப் பிடிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல் நடாத்த முயன்ற பிரபா குழுவின் கடற்புலிகள் மீது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினர் நடாத்திய அதிரடித் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் உயிருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். 22.08.06 கடல் வழியாக வந்திறங்கிய இவர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்க முயன்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதல் நடாத்த வந்தவர்களில் நால்வர் வன்னியைச் சேர்ந்தவர்கள் எனவும், மற்றொருவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் எனவும் பிடிபட்டவரின் வாக்கு மூலத்திலிருந்து தெரியவந்துள்ளது. இவர்கள் வன்னியில் விசேட பயிற்சியளிக்கப்பட்டு பிரபா குழுவின் தலைமையினால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி அதன் முக்கியஸ்தர்களை இலக்கு வைக்கவும், கிழக்கு மண்ணில் நாசகார வேலைகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டு அனுப்பப்பட்டவர்கள் என கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பிரபா குழுவின் தரப்பில் கொல்லப்பட்ட கடற்புலிகள் இயல்(அங்கத்துவ இலக்கம் ஒ-1312), குகன்(அங்கத்துவ இலக்கம் ஒ-0596), வீரமணி(அங்கத்துவ இலக்கம் ஒ-1085), கடல்வீரன் என அவர்களின் இயக்க தகடுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவர்கள் தாக்குதலுக்காகக் கொண்டு வந்த வெடிப்பொருட்களும், சக்தி வாய்ந்த ஆயுதங்களும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## கெப்பட்டிக்கொல்லாவையில் 63 சிங்கள பயணிகளைக் கொன்றது பிரபா குழுதான், மூதூரில் 17 நிவாரனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதில் அரச படைகளுக்கு தொடர்பு உண்டு, கண்காணிப்புக் குழுவின் தீர்மானம் இது

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற சில முக்கிய வன்செயல்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், அநுராதபுரம் கெப்பிட்டிக்கொல்லாவவில் பொதுமக்கள் பேருந்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் பிரபா குழுவின் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர். அதேபோன்று மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்களின் படுகொலை தொடர்பில் இலங்கை அரசாங்கப் படைகள் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிட்டிக்கொல்லாவ பகுதியில் பொதுமக்கள் பயணம் செய்த பேருந்து மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள கண்காணிப்புக்குழுவினர், தமது விசாரணைகளின் அடிப்படையிலும், பிரபா குழுவினர் செயற்படும் விதத்தின் அடிப்படையிலும் பார்க்கும் போது, குறிப்பாக அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பிரபா குழு அல்லது அவர்களுடன் சேர்ந்து செயற்படுபவர்களை விட, வேறு எவரேனும் அந்த தாக்குதலை நடாத்தியிருக்கக் கூடிய சாத்தியத்தை தம்மால் காணமுடியவில்லை என்று கூறியுள்ளது.

மூதூரில் 17 சிவிலியன் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தமக்கு சம்பந்தம் ஏதும் கிடையாது என்று இலங்கை அரசாங்கப் படையினர் மறுக்கின்ற போதிலும், அந்தச் சம்பவத்தில் அவர்களது தொடர்பைக் கோடிகாட்டும் பலமான குறிப்புகள் உள்ளதாக தாம் கண்டுபிடித்துள்ளதாக கண்காணிப்புக்குழு கூறியுள்ளது.

## பிரபா குழு வின் பீரங்கிப் பலத்தை அழிப்பது தொடர்பாக இராணுவமும், விமானப்படையும் தீவிர முயற்சி

வட-கிழக்குப் பகுதியில் படையினருக்கும் பிரபா குழுவினருக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதலில் பிரபா குழுவின் ஆளணிப் பலம் வெகுவாக அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது பிரபா குழுவினர் பெரிதும் நம்பியுள்ள எறிகணை, பீரங்கிப் பலத்தையும் அழிப்பது தொடர்பில் இலங்கை விமானப்படையும், இராணுவமும் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான முக்கிய சந்திப்பொன்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கும், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் குணதிலகவுக்கும் இடையில் இராணுவத் தலைமையக திட்டமிடல் பிரிவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது பிரபா குழுவின் பீரங்கி, எறிகணைத் தளங்களை இனங்கண்டு அவற்றை முற்றாக அழிப்பது என முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## அரச முக்கியஸ்தர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிப்பு

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரச முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களின் பயணங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதே போன்று இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பாதுகாப்பும் பிரபா குழுவின் தாக்குதல் அச்சம் காரணமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வட-கிழக்கில் இடம்பெற்று வரும் மோதலில் கடும் பின்னடைவைச் சந்தித்திருக்கும் பிரபா குழுவினர் அவற்றுக்குப் பழி வாங்கும் பொருட்டும், படைத்தலைமையின் கவனத்தை திசை திருப்பும் முகமாகவும் நாட்டின் முக்கிய பிரமுகர்களையும், பொருளாதார நிலைகளையும் தாக்கலாம் என புலனாய்வுத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரபா குழுவின் வடமுனை முகாம் மீது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு அதிரடி முற்றுகைத் தாக்குதல். ஐவர் பலி, பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் முகாம் முற்றாகத் தகர்ப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியான வடமுனையிலுள்ள பிரபா குழுவின் பிரதான இராணுவ முகாம் 22.08.06 காலை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது.

22.08.06 காலை 6:10 மணியளவில் பிரபா குழுவின் வடமுனை இராணுவ முகாமை முற்றுகையிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினர் முகாம் மீது அதிரடித் தாக்குதல் மேற்கொண்டனர். சுமார் 3 மணிநேரம் இடம்பெற்ற சமரின் பின் முகாம் தமிழ் மக்கள் விடுதலைப். புலிகளின் இராணுவப் பிரிவின் வசமானது. தாக்குதல் இடம்பெற்ற சமயம் மேற்படி முகாமில் 30இற்கும் மேற்பட்ட பிரபா குழு உறுப்பினர்கள் இருந்துள்ளனர். எனினும் அவர்களினால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை.

இம்மோதலில் பிரபா குழுவின் தரப்பில் ஐவர் கொல்லப்பட்டதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் பிரபா குழுவின் கிழக்கு மாகாண புலனாய்வு முக்கியஸ்தர் கீர்த்தியின் நேரடி உதவியாளர்கள் என்பதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற சகோதர, சகோதர இனப்படுகொலைகள், கொள்ளைகள் போன்றவற்றின் நேரடித் தொடர்பு உடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. அத்துடன் 9 துப்பாக்கிகள், இரண்டு தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பன கைப்பற்றப்பட்டதுடன், பிரபா குழுவின் வாகனமொன்று தீ மூட்டி எரிக்கப்பட்டதுடன் முகாம் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலை மேற்கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினர் எவ்வித சேதமும் இன்றி தமது தளங்களுக்கு திரும்பியுள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரால் பிரபா குழுவின் முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாவன, டி56 ரக துப்பாக்கிகள் 05 ஏ.கே 47ரக துப்பாக்கிகள் 04 பி.கே துப்பாக்கி ரவைகள் 3000 கைக்குண்டுகள் 20 ஏ.கே 47ரக துப்பாக்கி ரவைகள் 5500 கோல்சர் 02 ஏ.கே மகசின் 33

## அரசுடன் விரைவில் முஸ்லிம் காங்கிரசும் இணைகின்றது? ரவூப் ஹக்கீமுடன் பசில் ராஜபக்ஷதீவிர ஆலோசனை

அரசாங்கத்தில் இணைவது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் அவரின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ 25.08.06அன்று இரு தடவைகள் ஆலோசனை நடாத்தியுள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் இல்லத்தில் 25.08.06 வெள்ளிக்கிழமை இரவு 6.30 மணிக்கு தொடங்கிய இந்த ஆலோசனைக் கூட்டம் இரவு 8 மணி வரை நீடித்துள்ளது. மூதூர் முஸ்லிம்கள் பிரச்சனை குறித்தும் இந்த நிலையில் அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருக்க வேண்டும் என்றும் பசில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தில் இணைவது குறித்து முடிவெடுக்க கால அவகாசம் தேவை என்று ஹக்கீம் தரப்பில் கூறப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அவசர அழைப்பிற்கிணங்க நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறும் வகையில் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கோரி கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஅனுப்பியுள்ளார். தற்போது நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உள்ள ரணில் இக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளதை உறுதி செய்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஅனுப்பிய கடிதத்தை தொலைபேசியூடாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ரணிலுக்கு வாசித்தார்.

நீண்ட முயற்சிகளுக்குப் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரசையும் மலையக மக்கள் முன்னணியையும் அரசாங்கத்தில் இணைத்துக் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஇதர கட்சிகளையும் சேர்ப்பதில் தீவிர முனைப்பு காட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகளை உடனடியாக வழங்க வேண்டும் இல்லையேல் இந்தியாவுக்கு ஏதிரான சக்திகள் இலங்கையில் காலூன்ற வழி ஏற்படும் என்கின்றார் ரோ அமைப்பின் முன்னால் உயர் அதிகாரியான ராமன்

எந்த ஆபத்து வந்து விடக்கூடாது என்று இந்தியா அஞ்சிக் கொண்டிருந்ததோ அந்த ஆபத்து மிக அருகில் வந்துவிட்டது. இலங்கை பிரச்சினையில் இந்தியா வேகம் காட்டாமல், இலங்கை அரசாங்கத்திற்கு இராணுவ உதவிகள் வழங்காமல் இருந்ததன் விளைவு இலங்கையும், பாக்கிஸ்தானும் இராணுவ ரீதியில் இப்போது நெருங்கி விட்டார்கள். இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகளை உடனடியாக வழங்க வேண்டும் இல்லையேல் இந்தியாவுக்கு ஏதிரான சக்திகள் இலங்கையில் காலூன்ற வழி ஏற்படும் என இந்திய உளவுத்துறையான ரோவின் தீவிரவாத எதிர்ப்புப் பிரிவின் முன்னால் தலைவரான பி.ராமன் தெரிவித்துள்ளார்.

பிரபா குழு மீதான கருணைப் பார்வை இங்குள்ள அரசியல் தலைவர்கள் சிலர் மத்தியில் இருக்கின்றது. அதற்காக இந்தியாவின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க முடியாது. இங்குள்ள தலைவர்கள் சிலர் குழம்பிக் கொண்டிருப்பதனால் அதன் பலன் பாக்கிஸ்தானுக்கு இலாபமாக முடியும். எனவே இந்திய அரசாங்கம் நேரடியாக இதில் தலையீட்டு நிபந்தனைகளுடன் கூடிய இராணுவ உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சர்வாதிகாரி கொல்லப்பட்டால், அவர் அட்டகாசமும், அதிகாரமும் அன்றோடு முடிவுக்கு வந்துவிடும் ஆனால் ஒரு புரட்சிகரப் போராளி கொல்லப்பட்டால் அன்று தொடங்கி அந்தத் தியாகத் தீ பற்றிப் படர்ந்து, வளர்ந்து கொண்டேயிருக்கும். அது அணைவதில்லை


புரட்டாதி 01-15, 2006

இல,39. கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு
மின்னஞ்சல்: tamilalainews@yahoo.com
இணையத்தளம்: WWW.tamilalai.org
தொலைபேசி: 0652222102


*அன்புடன் வாசகர்களுக்கு,*
*மீண்டும் மறு தமிழ் அலையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி*

## பேர்க்கால குற்றவாளிகளாக பொதுமக்கள் ஆக்கப்படக் கூடாது.

இலங்கையில் மீண்டுமொரு தடவை போரின் கொடுமைகள் சூழ ஆரம்பித்திருக்கின்றது. வடகிழக்கில் படையினருக்கும், பிரபா குழுவினருக்குமிடையே பாரியளவிலான மோதல்களும், எறிகணை, விமானக் குண்டுவீச்சு என அழிவின் ஆரம்பம் தொடங்கிவிட்டது. இலங்கைக்கும், இத்தீவு மக்களுக்கும் யுத்தமும், அழிவும் புதிதில்லை. என்றாலும் இம்முறை அழிவு பல அதிகமாகவிருக்குமோ என்ற அச்சம் அனைவரையும் ஆட்கொண்டுள்ளது. வடகிழக்கில் இதுவரை நடைபெற்ற யுத்தங்களில் தொடர்புபட்ட தரப்பினரைவிட அதிகளவான இழப்புகளையும், வேதனைகளையும் சந்தித்தது மூவின மக்களும்தான். அதிகம் வடகிழக்கிலுள்ள தமிழ் மக்களின் நிலைமை மிகப் பரிதாபம். துரோகிப் பட்டம் கட்டல், கொலை, ஆட்கடத்தல், கப்பம் எனப் பிரபா குழுவின் கொடுமைகள், கொடூரங்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க தமிழ் மக்கள் ஓட அவர்களை பிரபா குழுவின் விம்பங்களாக அரச படைகள் நோக்க மத்தளத்திற்கு இருபக்கமும் அடி என்பதுபோல இருதரப்பினரிடையும் சிக்குண்டு அல்லல்ப்பட்டது தமிழ் மக்கள். அம் மக்களின் இழப்புகளும், வேதனைகளும் வார்த்தைகளினால் கூற சொற்கள் பத்தாது 2002ம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின் தம் மீதான கொடூரங்களுக்கும், இழப்புக்களும் முடிவு வருமென தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டது உண்மைதான். ஆனால் தொடர்ந்தும் இனந்தெரியாத நபர்கள் எனும் போர்வையில் தம் கைவரிசையைக் காட்ட தமிழ் மக்களின் துன்பங்களும் தொடர்கதையானது. மாற்றுக் கருத்துக்கொண்டோர், இராணுவத்திற்கு உதவுவோர் கதைப்போர் எனும் குற்றச்சாட்டில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் பல நூறைத் தொட்டது.

இந் நிலையில் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்' பதவியேற்றவுடன் இறுக்கமடைந்த முறுகல் நிலையில் பிரபா குழுவினரால் தாராளமாகவே போர்க்கால குற்றவாளிகளாக்கப்பட்டனர் தமிழ் மக்களும், ஏனைய சகோதர இன மக்களும். இது விடயத்தில் அரச படைகளையும் புனிதமானவர்கள் என்று கூறமுடியாது. ஏனெனில் சில படுகொலைகளில் அரச படைகளின் பங்கும் நிராகரிக்க முடியாது. தம்மீதான தாக்குதல்களும் எதிர் நடவடிக்கைகளும் இறுக்கமடைய தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அரசாங்கத்தை திசைதிருப்பவும் பிரபா குழுவினர் மனிதாபிமானமற்ற முறையில் பொதுமக்களைக் கொன்றனர். கெப்பட்டிக் கொல்லாவையில் 63 அப்பாவிகளான சிங்கள இனப் பயணிகள், வங்காலைக் கொடூரம், வெலிக்கந்தைப் படுகொலை என்று நீண்டுகொண்டு மூதூரில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்களைக் கொன்று சுமார் 45,000ற்கும் மேற்பட்டோரை அகதிகளாக்கியும் இன்றும் தொடர்கின்றது.

மறு புறத்தில் படையினரின், விமானப்படையின் குண்டுவீச்சால் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பல்லாயிரம் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதுடன் இருப்பிடங்களையும், உடைமைகளையும் இழந்து அகதிகளானர். காயப்பட்டவர்களுக்கு உரிய மருத்துவ வசதியில்லாமல், மரணித்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. தற்போது யாழ் குடாநாட்டில் தொடரும் மோதல் நிலைமையும், ஊரடங்குகள் அங்குள்ள மக்களை தம் வீடகளுக்குள்ளேயே அகதிகளாக்கியுள்ளது. இந் நிலைமை தொடருமானால் மாபெரும் மனித அவலம் ஏற்படுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எச்சரித்துள்ளமையும் இங்கு நினைவூட்ட வேண்டியது.

வடகிழக்கிலும் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்களினாலும் இடம்பெயர்ந்துள்ள தமிழ்பேசும் மக்கள் அடிப்படை வசதிகளின்றியும், உரிய நிவாரணங்கள், சுகாதார சேவைகளின்றியும் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு ஆளாகி போர்கால குற்றவாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர். இதனைவிட தலைநகர் கொழும்பில் இறுக்கமடைந்துள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளினாலும் தமிழ் மக்கள் பெரும் துன்பங்களையே சந்திக்கின்றனர். தலைநகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது. பிரபா குழுப் பயங்கரவாதிகளிடமிருந்து அரச தலைவர்களையும், பாதுகாப்பு முக்கியஸ்தர்களையும், பொருளாதார இலக்குகளையும், பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமைதான். ஆனால் இதற்காக குறிப்பிட்ட இனம் மட்டும் சந்தேகக் கண்கொண்டு நோக்குவது ஏற்க் முடியாதது. தலைநகரில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகள், கைதுகளில் பெரும்பாலும் தமிழ் மக்களே இலக்காக்கப் படுகின்றனர். வடகிழக்கிலிருந்து தமிழ் மக்களில் பெரும்பாலானோருக்கு சிங்கள மொழி பரீச்சயமில்லை. இதனால் அவர்கள் கைதாகும் அவலமும் தொடர்கின்றது. பெரும்பாலான தமிழ் மக்கள் பிரபா குழுவின் பயங்கரவாத நடவடிக்கைகளை கடுமையாக எதிர்க்கின்றனர்.

எனவே நடைபெறும் மோதல்களிலும், சுற்றிவளைப்புக்களிலும் பொதுமக்கள் போர்க்கால குற்றவாளிகளாக மாற்றப்படக் கூடாது. இதுவிடயத்தில் அரசாங்கம், பிரபா குழு இருதரப்பினருக்கும் சம பொறுப்புண்டு. ஒரு பயங்கரவாதக் குழுவிடமிருந்து எதிர்பார்பதைவிட இறைமை மிக்க அரசாங்கத்திடமிருந்து மனிதாபிமானத்தையும், மனித உரிமைகளையும் எதிர்பார்க்களாமென்பது மக்களின் எதிர்பார்க்காகும்.

நன்றி.
ஆசிரியர்.

# அடக்கப்பட்டுவரும் தமிழ் மக்களின் உண்மையான உரிமைக் குரல் நாங்கள்தான்

### தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா அம்மான்

**ஜனநாயகப் பாதையை எடுத்திருக்கும் அணைத்துத் தமிழ் கட்சிகளும் எங்களுடைய கட்சி உட்பட கட்டாயம் இந்தப் பேச்சுவார்த் தைகளில் பங்குபற்ற வேண்டும். நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் அழுக்கப் பட்டுவரும் தமிழர்களின் உண்மை யான குரல். என கருணா அம்மான் தெரிவித்தார்.**



> **எங்களுடைய உரிமை எதுவோ அதற்காக நாங்கள் ஜனநாயக முறையில் புரட்சி செய்வோம்.**

**கேள்வி:** சமாதானப் பேச்சு வார்த்தைகளில் நீங்களும் ஒரு அங்கமாக இருக்க வேண்டுமென உங்களுடைய கட்சி குறிப்பிட்டுள்ளது. உங்களுடைய பங்கு என்னவாக இருக்கும்?

**பதில்:** நாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். மேலும் அவர்களுடைய அபிலாசைகளை எடுத்துச் செல்பவர்கள். பிரபா குழு தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல. மேலும் ஐரோப்பிய ஒன்றியமும் அண்மையில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது. இன்னும் பிரபா குழு கோயபல்ஸ் ஆன தமிழ்ச் செல்வன் வடகிழக்கு மாகாணங்களில் 77சதவீதத்திற்கு மேல் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அண்மையில் ஒஸ்லோவிலே தவறாக உரிமை கோரினார். வடகிழக்குப் பிரதேசங்களில் பரந்து வாழும் தமிழ் மக்கள் மீது எங்களுக்கு கணிசமான அளவு செல்வாக்கு உண்டு. ஜனநாயகப் பாதையை எடுத்திருக்கும் அணைத்துத் தமிழ் கட்சிகளும் எங்களுடைய கட்சி உட்பட கட்டாயம் இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வேண்டும். நாங்கள் பிரபா குழு அடக்கப்பட்டுவரும் தமிழர்களின் உண்மையான குரல்.

**கேள்வி:** பேச்சுக்களில் உங்களுக்கு இடம் கொடுக்கப் படாவிட்டால் நீங்கள் அதை எவ்வாறு கையாளுவீர்கள்?

**பதில்:** எங்களுடைய உரிமை எதுவோ அதற்காக நாங்கள் ஜனநாயக முறையில் புரட்சி செய்வோம்.

**கேள்வி:** நோர்வேயினர் புலிகளுக்கு சார்பாக நடந்து கொள்வதாக உங்களுடைய கருத்தை வெளிப்படுத்தியிருந்தீர்கள். இதற்கான நடைமுறை உதாரணங்கள் ஏதும் உங்களிடம் உள்ளனவா?

**பதில்:**அண்மையில் ஒஸ்லோவிலே சிதைந்து போன பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு பிரபா குழுவுக்கு கொடுக்கப்பட்ட லஞ்சம் எப்படி? நோர்வேயின் நிதியில் தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்குப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் கிளிநொச்சியில் கட்டப்பட்ட கட்டடங்கள் எப்படி? இளவரசி துவாரகா அயர்லாந்திலும் தமிழ்ச்செல்வனின் மகள் நோர்வேயினும் கல்வி கற்கின்றனர். இது எப்படி? நோர்வேயினருடைய எந்தப் பொருளாதார உதவியும் கட்டாயம் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கவேண்டுமேயன்றி பிரபா குழு அல்ல.

**கேள்வி:** சமாதான ஏற்பாட்டாளர்களின் பங்கு எவ்வாறு மாற்றப்பட வேண்டும் அல்லது விரிவுபடுத்தப்பட வேண்டும்?

**பதில்:** சமதான ஏற்பாட்டாளர்களாக நோர்வேயினருடைய பங்குபிரபா குழு ஓர் இணக்கப் பாட்டிற்கு கொண்டுவரப் பட்டதுடன் நோர்வேயினருடைய நடவடிக்கைகள் பிரபா குழுவை சமாதானப் படுத்துபவையாக உள்ளன. நோர்வேயின் பங்கில் இழந்துபோன நம்பிக்கை மீண்டும் ஏற்படுத்தப்படுமா என்பது கேள்விக்கு விடப்பட்டுள்ளது. அண்மையில் ஒஸ்லோவில் தமிழ்ச்செல்வனால் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலைப்பாட்டை கருத்திற் கொண்டால் ஒரு தனி ஏற்பாட்டாளரும் எதிர் காலத்தில் விமர்சனங்களுக்கு உள்ளாகுவதில் இருந்து பாதுகாக்கப் படமாட்டார்கள். நோர்வேயினருக்கு மேலதிகமாக இந்தியாவும் ஏற்பாட்டாளராக அல்லது இணைப் பாளராக பிரதான பங்கை நிட்சயம் ஆற்றவேண்டும். ஐக்கியநாடுகளுக்கான சாத்தியமான ஒரு பங்கும் தொடரப்படவேண்டும்.

**கேள்வி:** நீங்கள் கலைந்தபோது கிழக்கிலே பிரபா குழுவின் பலம் என்ன? உங்களுடன் எத்தனை பேர் உள்ளார்கள்? ஏன்?

**பதில்:** நான் பிரபா குழுவில் இருந்து பிரிந்தபோது பயிற்றப்பட்ட 6000 உறுப்பினர்கள் இருந்தார் கள். 90 சதவீதமானோர் இன்னும் என்னுடன் இருக்கின் றார்கள். நாங்கள் மட்டக்களப் பில் டெலம்விபி ( மீனகம்) காரியாலயம் திறந்தபின் ஆயிரத்திற்கும் அதிகமானோர் இணைந்துகொண்டிருக்கின்றார்கள்.

**கேள்வி:** கிழக்கில் உங்கள் பலம் என்ன? புதிய ஆட்கள் சேர்ந்துகொண்டிருக்கின்றார்களா?

**பதில்:** முன் கூறிய பதில் இதற்கும் பொருத்தமானது.

**கேள்வி:** புலிகள் உண்மையுடன் சமாதானப் பேச்சுக்களுக்கு திரும்புவார்களா அல்லது யுத்த தந்திரங்களைத் தொடர்வார்களா?

**பதில்:** கடந்த முப்பது வருடகாலத்திற்கும் மேற்பட்ட பிரபா குழுவின் வரலாற்றைக் கருத்திற் கொண்டு நோக்கினால் அவர்களிடம் இருந்து எவ்வாறு உண்மையை எதிர்பார்க்க முடியும்? அவர்கள் ஒருபொழுதும் உண்மையாக இருக்க மாட்டார்கள். மேலும் அவர்களால் உண்மையாக இருக்க முடியாது. பிரபா குழுவினுள் உள்ள அடுக்கடுக்கான தவறுகள் ஆழமானவை. மேலும் அவை திருத்தப்பட முடியாதவை. பிரபா குழு என்றால் அது பிரபாகரன் தான். இந்தத் தனிமனித ஆட்சி தொடரும் வரை பிரபா குழுவிடமிருந்து எந்த நன்மையையும் எதிர்பார்க்க முடியாது. பிரபா குழுவிடம் ஒரு பை நிறைய சூதுகள் உள்ளன. அவர்களும் அதைப் பயன்படுத்தியவண்ணம் உள்ளனர். ஜனநாயக அரசியல் என்று வரும்போது இவர்களிடம் யுத்தத்தந்திர நடவடிக்கைகளும் இருக்காது ஒரு திட்டமும் இருக்காது. அவர்கள் பை முடியும் வரை சூதுகளைத் தொடர்வார்கள்.

**கேள்வி:** இப்படியான யுத்தத் தந்திரங்களை இஷ்டப்படி செய்வதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் அடைய நினைப்பது என்ன?

(11ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விகளுக்கு காரணம் தேடும் பிரபா குழு.

உத்தமன்

இலங்கையின் வடகிழக்குப் பகுதில் சமீப காலமாக இடம்பெற்றுவரும் உக்கிர மோதல்கள் மீண்டுமொரு தடவை 2002ம் ஆண்டுக்கு முற்பட்ட நினைவுகளைக் கண்முன் கொண்டு வருகின்றது. தொடர் எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல், மக்களின் இடம்பெயர்வு என்பன இன்றைய அழிவின் இன்னொரு சாட்சிகளாகும். இக்கட்டுரை எழுதப்படும் போதும்கூட சம்பூரை நோக்கி இராணுவ நடவடிக்கையும், வடபகுதியில் விமானத் தாக்குதல்களும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கு இரு தரப்பினருக்கும் துணிவில்லாத நிலையில் பதில் இராணுவ நடவடிக்கை எனும் போர்வையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. தற்போதைய யுத்த களமுனையை பக்கச் சார்பின்றி ஆராயும்போது பிரபா குழுவின் பிரச்சார பலத்தையும் மீறி, அவர்கள் சார்பான ஊடகங்கள் எவ்வளவுதான் மூடி மறைக்க முற்பட்ட போதும் பிரபா குழுவின் தோல்விகளும், இழப்புக் களையும் கூறித்தான் ஆகவேண்டும்.

கடும் போக்குவாதியாக அடையாளப் படுத்தப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவுடனேயே தாமும் கடும் போக்குடையவர்கள் என்பதை வெளிப்படுத்தும் முகமாக வடகிழக்கில் படையினர் மீது தொடர் கிளைமோர், எறிகுண்டு, துப்பாக்கிச் சூடு நடாத்தினர் பிரபா குழுவினர். இச் சின்னச் சின்ன விளையாட்டுக்கள் சுமார் 180 படைவீரர்களின் உயிரையும், 80ற்கும் மேற்பட்ட பொதுமக்களின் உயிர்களையும் காவியது. ஆனாலும் எதிர்பார்க்கப்பட்டது போல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதன்னை கடும் போக்குவாதியாக அடையாளப்படுத்தவில்லை. பிரபா குழுவின் சீண்டல்களுக்கு மத்தியில் சமாதானம் குறித்தே அவரது அரசாங்கம் உரத்துப் பேசியது.

கொழும்பில் இராணுவத் தலைமையகத்தினுள் புகுந்து இராணுவத் தளபதி மீது தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளுமளவிற்கு பொட்டன் துணிந்தபோது இப் பயங்கரவாத குழுவிற்கெதிரான இராணுவ நடவடிக்கையின் அவசியம் உணரப்பட்டது. உண்மையிலேயே இராணுவத் தளபதி மீதான தாக்குதலைத் தொடர்ந்து தம்மீது இராணுவ ரீதியான பதிலடி தரப்படுமென பிரபா குழு எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின் 2004ம் ஆண்டு இலங்கையின் மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவரும், ஒரு இராணுவத் தளபதியைவிட மக்கியத்துவம் கூடியவருமான வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பிரபா குழுவினரால் கொல்லப்பட்டார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் படுகொலையை அன்றைய சந்திரிக்காவின் அரசாங்கம் வெறுங் கண்டனத்துடன் தனது எதிர்ப்பை மட்டுப்படுத்திக் கொண்டது. இக்கண்டனக் கணைகள் தம்மை எதுவும் செய்யாது என்பதை பிரபா குழுவினர் நன்கறிவர். இதுபோன்றதொரு நிலையே இராணுவத் தளபதி மீதான தாக்குதலின்போது பிரபா குழுவினர் கணக்குப் போட்டனர். இக்கணக்குப் பிழைத்ததே அவர்களுக்குக் கிடைத்த பெரும் தோல்வி.

இதன் பின் வந்த நாட்கள் பிரபா குழுவுக்கு வேதனை மிகுந்ததாகவே அமைந்தது. சர்வதேசத்தின் கடுமையான அழுத்தம், இலங்கை அரசின் இறுக்கம் என்பன காரணமாக சிக்குண்ட பிரபா குழுவுக்கு இலங்கை அரசை வழிக்குக் கொண்டுவந்து தம் தேவைகளை நிறைவேற்ற ஒரு ஆயுதம் தவைப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் பல்லாயிரம் மக்களின் ஜீவனோபாயத்துடன் தொடர்புடைய மாவிலாறு அணைக்கட்டை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி அரசாங்கத்தை அடிபணிய வைக்க முயன்றனர்.

மாவிலாறு அணைக்கட்டு விவகாரம் பல்லாயிரம் மக்களின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட விடயம் என்பதனால் நிச்சயம் அரசாங்கம் இராணுவ ரீதியில் அன்றி சமரச முயற்சிகளிலேயே ஈடுபடும் எனவும், தாம் தொடர்ந்தும் பிடிவாதம் பிடித்தால் தமது கோரிக்கைகளை நிறைவேற்றியாவது அணைக்கட்டைத் திறந்து விடவே அரசாங்கம் முன்வருமென



கணக்கிட்ட பிரபா குழுவுக்கு அணைக் கட்டைத் திறந்து விடுவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை பலத்த அடியாக விழுந்தது மட்டுமன்றி பிரபா குழுவினர் மாவிலாறு அணைக் கட்டை மூடிய விவகாரத்தை சர்வதேச ரீதியில் மனிதாபிமானத்திற்கு எதிரான நடவடிக்கை என பிரச்சாரப்படுத்திய அரசாங்கம் இதனைப் பயன்படுத்தி மாவிலாறு அணைக்கட்டுடன் தொடர்பு படாத மட்டக்களப்பின் மீனகம், முல்லைத்தீவில் இரணைமடு போன்ற இடங்களையும் இலக்கு வைத்து தாக்கியழித்தது விமானப்படை. சற்றும் எதிர்பார்க்காத இத் தாக்குதலினால் ஆடிப்போய்விட்டது பிரபா குழு. ஓரிரு நாட்களில் ஒரு வலுவான இராணுவ நடவடிக்கை மூலம் தீர்க்கக்கூடிய மாவிலாறு அணைக்கட்டு விவகாரத்தை பல நாட்கள் நீடித்த அரசாங்கம் இத் தாக்குதலைப் பயன்படுத்தி பிரபா குழுவின் பல நிலைகளை வடக்கிலும் கிழக்கிலும் தாக்கியது. எனவே பிரபா குழுவின் இராணுவ பலம் குறித்து பலத்த சந்தேகம் மக்கள் மத்தியிலேயே உள்ளபோது இத் தொடர்த் தோல்விகள், இழப்புகளுக்கு அரசாங்கத்திற்கு கடுமையான பதிலடி கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் பிரபா குழுவுக்கு ஏற்பட்டது. இதனால் ஆழமறியாது காலைவிட்ட மாபெரும் தவறொன்றை பிரபா குழு செய்தது. அதுதான் மூதூர் மீதான தாக்குதல்.

02.08.2006 அன்று அதிகாலை வேளையில் மூதூர்மீது வலிந்த தாக்குதல் மேற்கொண்ட பிரபா குழுவினர் முன்னேறி சில இடங்களையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது உண்மைதான். ஆனால் மூதூரிலிருந்து முஸ்லிம், தமிழ் மக்கள் வெளியேற ஆரம்பித்தது பிரபா குழுவுக்கு சாபக்கேடு. கடற்படையின் உதவியுடன் மேலதிக படையினர் இறக்கப்பட்டு விமானப் படையினரும் பிரபா குழுவினர் மீது குண்டு மழைபொழிய திணறியது பிரபாப் படை.

மூதூரை மீட்கிறது சொர்ணம் தலைமையிலான புலிப்படை என ஆரவாரம் செய்த பிரபா குழுவின் ஊடகங்கள் அடுத்து வந்த நாட்களை அடக்கி வாசித்தன. பிரபா குழுவினால் கட்டாயப் பயிற்சி அளிக்கப்பட்டு பலவந்தமாக துப்பாக்கியுடன் களமுனைக்கு அனுப்பப்பட்ட 120 சிறுவர்களின் சடலங்கள் யாருக்கும் தெரியாமல் பனிச்சங்கேணிப் பகுதியில் புதைத்ததை மூடி மறைத்தன பிரபா குழுவின் ஊடகங்கள். பல பிரபா குழு உறுப்பினர்களின் சடலங்கள் மீட்கப் படாமல் அழுகிப்போன அவலத்தையும் மறைத்தனர்.

மூதூரில் முப்படையினரும் மேற்கொண்ட தாக்குதலில் திக்குத் தெரியாமல் பிரபா குழு திணற, தமது இலக்கை அடைந்த எமது படையணிகள் தங்கள் தளத்திற்கு மீண்டும் திரும்புகின்றனர் என்று கூறி பிரபா குழுவின் ஆதரவாளர்களை சமாதானப்படுத்தினார் இளந்திரையன். மூதூரில் பிரபா குழு சாதித்தது பல அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைப் பறித்ததுடன் அவர்களின் சொத்துக்களைச் சூறையாடி அகதிகளாக்கியதைத் தவிர வேறொன்றுமில்லை.

**தற்போதைய யுத்த களமுனையை பக்கச் சார்பின்றி ஆராயும்போது பிரபா குழுவின் பிரச்சார பலத்தையும் மீறி, அவர்கள் சார்பான ஊடகங்கள் எவ்வளவுதான் மூடி மறைக்க முற்பட்ட போதும் பிரபா குழுவின் தோல்விகளும், இழப்புக் களையும் கூறித்தான் ஆகவேண்டும்.**


பிரபா குழுவின் இத் தொடர்த் தோல்விகள், இழப்புக்களும் பிரபா குழு உயர் மட்டத்தினரிடையே பெரும் கருத்து முரண்பாட்டையும் உறுப்பினர்கள் மத்தியில் மனோரீதியான பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. தம் உயிர்களைப் பாதுகாக்க கிழக்கிலிருந்து படையினரிடமும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடமும் சரணடைந்த பிரபா குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. மக்கள் மத்தியிலும் பிரபா குழுவிற்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெற்றதுடன் அவர்கள் மீதான கொஞ்ச நெஞ்ச நம்பிக்கையும் முற்றாகத் தகர்ந்தது.

இத்தகைய நிலையில் மாபெரும் தாக்குதல் ஒன்றை படையினருக்கு எதிராக மேற்கொண்டு தம் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் பிரபா குழுவின் நிதியாளர்களையும் திருப்திப் படுத்தவேண்டிய அவசியமும், அவசரமும் பிரபா குழுவின் தலைமைக்கு ஏற்பட்டது. கிழக்கில் அது சுத்தமாக சாத்தியமில்லை. எனவே வடபகுதியில் யாழ் குடாநாட்டை முற்றுகைக்குள்ளாக்கி அங்குள்ள 45000 படையினரின் தொடர்புகளைத் துண்டித்து அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம்



கொடுப்பதுடன் தம் பலத்தையும் பறைசாற்றலாம் என்பதே பிரபா குழுவின் கணக்கு. ஆனாலும் அது அளவிற்கு மீறிய ஆசை என சில பிரபா குழுவின் முக்கியஸ்தர்கள் எடுத்துக் கூறியும் பிரபாகரன் கேட்கவில்லை. சூசை, பால்ராஜ், பாலகுமாரன், தீபன் போன்ற பிரபா குழுவின் முன்னணித் தளபதிகளின் நேரடி வழிகாட்டலில் யாழ் குடாநாட்டை முற்றுகைக்குள்ளாக்கும் திட்டம் அவச அவசரமாக பலரைத் திருப்திப்படுத்த தயார் செய்யப்பட்டு நடைமுறையும் செய்யப்பட்டது.

கடந்த 11ந் திகதி முகமாலைப் பகுதியிலிருந்தும், மறுமுனையில் மண்டைத் தீவிலிருந்தும், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு வழியாகவும் ஒரே நேரத்தில் தாக்கி யாழ் குடாநாட்டை முற்றுகைக் குள்ளாக்கும் திட்டத்துடன் களமிறங்கின பிரபா குழுவின் படை. அதே நேரம் கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர் கோயில் பகுதிகளிலுள்ள படை முகாம்களை இலக்குவைத்தும் மோட்டார், எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளவும் தயாராகினர் பிரபா குழுவினர். அதேநேரம் இங்கு குறிப்பிடவேண்டிய இன்னுமொரு விடயம் என்னவென்றால் பிரபா குழுவின் தொடர்த் தோல்விகளினால் படைத்தரப்பு உளரீதியாக பெரும் உற்சாகத்தைப் பெற்றிருந்தது. இது படையினரின் மனோவலிமையை பெரிதும் அதிகரித்திருந்தது மட்டுமன்றி பிரபா குழுவினர் தமது தோல்விகளுக்கு பரிகாரம் தேட முற்படுவார்கள் எனவும் அது பெரும்பாலும் யாழ் குடாநாடாக இருக்கலாம் எனவும் அரச புலனாய்வுத் துறை படைத்தரப்பை எச்சரிக்கை செய்தது. எனவே யாழ் குடாநாட்டின் மீதான பிரபா குழுவின் தாக்குதலை எதிர்பார்த்து குடாநாட்டுப் படைத்தலைமை காத்திருந்தது. (09ம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர அரசியல் தலைமைத்துவத்தை நோக்கி.

புலவன்



தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணாமிக்கப்பட்டதில் இருந்து இம் மக்களின் அரசியல் தலைமைத்துவம் படிப்படியாக செயலிழக்கப்பட்டது. தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டம் பாசிசக் கும்பலினால் பயங்கரவாதப் போராட்டமாக சீரழிக்கப்பட்ட பின் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் முற்றாக வெற்றிடமானது.

உலகில் இதுவரை வெற்றிபெற்ற மக்கள் புரட்சியும், போராட்டங்களும் தம்மின மக்களின் உரிமைகளை அகிம்சை ரீதியில் கேட்டும் அவை மறுக்கப்பட அப் போராட்டங்கள் ஆயுத ரீதியில் பரிணாமித்து அவ் வெற்றிகள் நிரந்தரமானதொரு தலைமைத்து வத்தினூடாக அரசியல் வெற்றியாக மாற்றப்பட்ட செய்தியைத்தான் உரத்துக் கூறுகின்றன.

இலங்கையில் வடகிழக்கில் செறிந்து வாழ்ந்த தமிழ் மக்கள் சுதந்திரம் பெற்றதிலிருந்து படிப்படியாக தம் உரிமைகளில் ஓரம் கட்டப்பட்டு கடைசியில் அனைத்து அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் தம் உரிமைகளை வென்றெடுக்கப் போராட நிர்ப்பந்திக்கப் பட்டனர். அப்போராட்டம் ஆரம்பத்தில் அகிம்சை வழியில் இருந்து அது நிராகரிக்கப்பட ஆயுத ரீதியாக விஸ்வரூபம் பெற்றது. தமிழ் மக்களின் ஆயுத ரீதியான போராட்டம் இதுவரை ஏன் அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கவில்லை. அவர்கள் ஆயுதப் போராட்டத்தில் சாதிக்க வில்லையா? உலகிலே மிகப் பெரும் போராட்ட இயக்கமாக மாற்றியமைத்தும், போராடியவர்கள் உலகமே வியந்து பார்க்கும் அரிய வியக் கத்தக்க இராணுவ வெற்றிகளைப் பெற்று எதிரிகளை விரட்டியடித்தனர் எனினும் தமிழ் மக்களினால் ஏன் இதுவரை நிம்மதியாகவும், மறுக்கப்பட்ட தம் உரிமைகளைப் பெற்று வாழ முடியவில்லை.

உலகில் வெற்றிபெற்ற போராட்டங்களும் புரட்சிகளும் கூறிய செய்தியை நிராகரித்ததுதான் காரணம். யுத்தகளத்தில் தம் உயிர்களைத் துச்சமென மதித்து மக்களுக்காகவும், மண்ணிற்காகவும் போராடிப் பெற்ற வெற்றிகளை போராட்டத் தலைவன் என தன்னைக் கூறுபவரினால் அரசியல் வெற்றியாக மாற்றத் தெரியாததே. என்ற உண்மையைத்தான் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் உரத்துக் கூறுகின்றது.

ஆயுத ரீதியான போராட்டம் தனது 25 வருட நிறைவையும் பூர்த்தி செய்தாகிவிட்டது. ஆனாலும் இத்தீவில் இன்னும் தமிழ் மக்கள் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழும் காலம்தான் இன்னும் மலரவில்லை ஆரம்பத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து அவர்களின் நிம்மதியான வாழ்விற்கு தடையாக இருந்தது சிங்களப் பேரினவாதம். ஆனால் இன்று அதே கைங்கரியத்தை தமிழ்ப் பேரினவாத, மேலாதிக்க சக்திகள் மேற்கொண்டு வருவது மிக வேதனையானது.

இன்று தமிழ் மக்கள் தம் உரிமைகளுக்கும் நிம்மதியான வாழ்விற்கும் போராட வேண்டியுள்ளது சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து அல்ல. முதலில் தம்மின மக்களைத் திட்டமிட்டு தம் அதிகார வெறிக்கும், சுகபோக வாழ்விற்கும் இரையாக்கும் பாசிசக் கும்பலிடமிருந்துதான். தம் மக்களின் உரிமைகளை வென்று அவர்கள் நின்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ அவர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தலைமைத்துவம் அவசிய, அவசரத் தேவையாகவுள்ளது. இம் மக்களின் அரசியல் தலைமைத்துவம் எதற்காக திட்டமிட்டு அழிக்கப் பட்டதோ அந் நோக்கம் நிறைவேறாமல் தடுக்கவேண்டியது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

இச் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய கலங்கரை விளக்கமாகத் திகழவேண்டிய பல புத்திஜீவிகளும், அரசியல்த் தலைவர்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டனர் எதற்காக? இவர்களின் மூலம் தமிழ் மக்களுக்கு நின்மதியான வாழ்வு கிடைத்துவிட்டால் தாம் புறக்கணிக் கப்படலாம் என்பதுடன் தனிமனித அதிகார மோகமுமே.

தமிழினத்தின் புத்திஜீவிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் துரோகிப் பட்டம் சூட்டிக் கொன்றதனால் இவ்வினத்திற்குக் கிடைத்த உரிமைகள் என்ன? நன்மைகள் என்ன? தமிழினம் அரசியல் அநாதை ஆக்கப்பட்டதைத் தவிர கண்டபயன் எதுவும் இல்லை. தமிழினத்தின் புத்திஜீவிகளையும், அரசியல் தலைவர்களையும் துரோகிகள் என்று மக்களுக்கு அடையாளம் காட்டியவர்களினால் தம்மின மக்களுக்குச் செய்ய முடிந்தது என்ன?

தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிச்சயமற்ற தாக்கியதைத் தவிர வேறு எதனையும் சாதிக்க முடியவில்லை. இன்று வடகிழக்கில் சர்வாதிகார பாசிசக் கும்பலுக்கு எதிராக பல மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல் கட்சிகள் இருக்கின்றன. தமிழ் மக்களுக்கான உறுதியான, நிலையான அரசியல் தலைமைத்துவத்தை இவர்களாலும் வழங்க முடியவில்லை என்பது ஏற்றுக்கொள்ளபபட வேண்டியது. இம் மாற்றுக் கருத்துக் கொண்டோரினால் வடகிழக்கில் ஏன் அதனையும் தாண்டி சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. தம் கருத்துக்களை, சிந்தனைகளை மக்களிடம் கொண்டுசெல்ல முடியாமல் தடுக்கப்பட் டுள்ளனர். இனந்தெரியாத நபர்கள் எனும் பெயரில் கொல்லப்பட்ட மாற்றுக் கருத்துடையோர் பல ஆயிரத்தையும் தாண்டும்.

இதனைவிட ஒரு மாபெரும் வரலாற்று உண்மையை இன்னும் ஒரு கும்பல் உணராமல் இருப்பதுடன் அவ்வழியில் தமிழ் மக்களையும் அழைப்பதுதான் இவ்வினத்திற்கு இழைக்கும் மன்னிக்கமுடியாத துரோகமாகும். தமிழ் மக்களின் உரிமைகளையோ, நின்மதியான வாழ்வையோ ஆயுதம் மூலம் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதை இன்னும் சிலர் உணரவில்லையா? இல்லை உணர்ந்தும் உணராததுபோல் நடிக்கின்றார்களா? என்பதும் தெரியவில்லை.

நியாயங்கள் பலமிகுந்த உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக மாற்றியதனால் பல ஆயிரம் இளைஞர்களையும், சிறுவர்களையும் பலிகொடுத்து அநாதைகளையும் விதவைகளையும் உருவாக்கியதைவிட வேறெதனையும் சாதிக்கவு மில்லை. இத் துர்ப்பாக்கிய நிலைமை இன்னும் தொடர்ந்தால் இவ்வினத்தின் எதிர்காலம் குறித்து சிந்திக்க யாரும் இருக்கமாட்டார்கள் என்பதுதான் உண்மை. ஆக தமிழ் மக்களின் மாபெரும் அழிவைத் தடுத்து அம்மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் நிம்மதியான வாழ்வை உறுதி செய்ய நிரந்தர அரசியல் தலைமைத் துவத்தை நோக்கிய பயணம் இன்று மிக இன்றியமையாத தாகின்றது. இப் பயணப் பாதை பூக்கள் தூவப்பட்ட பஞ்சு மெத்தையல்ல. கற்களும், முட்களும் நிறைந்த கடுமையான பாதை.

ஆனால் இங்கு சிந்திக்க வேண்டிய முக்கிய விடயமும் உண்டு. ஒரு பாசிசக் கும்பல் தனிமனித அதிகார மோகத்திற்காக தம்மின மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்தி அம்மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி பல்லாயிரம் இளைஞர்களை பலி கொடுத்ததிற்கு எவ்வகையிலும் குறையில்லாததுதான். தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் என தம்மை அடையாளப்படுத்திய சில தலைவர்களும், கட்சிகளும் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களையே பிரித்து பாகுபாடு காட்டியமை.

தமிழ் மக்களின் அரசியல், ஆயுதப் போராட்டப் பயணங்களை கூர்ந்து நோக்கும்போது கிழக்கு மண், மக்கள் திட்டமிட்டு வஞ்சிக்கப்பட்டமை புலப்படும். அடையாளப் படுத்தக்கூடிய ஓரிரு அரசியல் தலைமைகள் வடமண்ணில் இன்றுவரை இருந்தாலும் கிழக்கு மண் அதுவிடயத்தில் இன்றுவரை அநாதையாக்கப்பட்டே வந்துள்ளது. கிழக்கு மண்ணில் தம்மின மக்களின், மண்ணின் உரிமைக்காய் குரல்கொடுத்த, போராடிய பல அரசியல் தலைவர்கள் தமிழ் வரலாற்றில் இருந்துங் கூட திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப் பட்டனர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினால் கிடைக்கப்பெற்ற அனைத்து நன்மைகளும், அனுகூலங்களும் குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டும் அனுபவிக்க தம் உயிர்களைத் தியாகம் செய்தனர். கிழக்கு மண் இளைஞர்கள். அரசியல் ரீதியாக கிடைக்கப்பெற்ற சலுகையிலும் கிழக்கு மண் புறக்கணிக்கப்பட்டது. இதனைவிடக் கொடுமை என்னவென்றால் கிழக்கு மண்ணையும், மக்களையும் தொடர்ந்தும் தம் மேலாதிக்கத்தில் வைத்திருக்க இங்குள்ள வளங்களையும் வனப்புகளையும் சூறையாடியமையும், அழித்தமையும் என்றும் மாறாத வடுக்களாகும். வஞ்சிக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட மக்களில் இருந்து இவ்வினத்திற்கான அரசியல் தலைமைத்துவம் மலருமானால் அது அனைத்து மக்களையும் அரவணைப்பதுடன் உரிமைக்காய் உரத்த குரலில் பேசும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதனைவிட கிழக்கு மண் பல்லின மக்களையும், பல்லினக் கலாச்சாரத்தையும் கொண்டது. எனவே சகோதர இன மக்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் அங்கீகரிக்கக்கூடிய, அவர்களுடன் ஒற்றுமையாகவும், புரிந்துணர்வுடனும் வாழக்கூடிய சமுதாயக் கட்டமைப் பொன்றமையும் உருவாக்கக் கூடியதாய் அத் தலைமைத்துவம் இருக்கவேண்டும். கிழக்கு மண்ணில் இருந்து உதிக்கும் அரசியல் தலைமைத்துவத்திடமே இப்பண்புகளை எதிர்பார்க்க முடியும்.

தமிழ்ப் புதிதிஜீவிகளையும், அரசியல்த் தலைவர்களையும் அழித்ததினாலும். மாற்றுக் கருத்துக் கொண்டோர் அச்சுறுத்தப் பட்டதனாலும் உருவாகியிருக்கும் அரசியல் வெற்றிடத்தை நிரப்பி தமிழ் மக்களுக் கானதொரு நிரந்தர அரசியல் தலைமைத் துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளனர். அடக்கப்பட்ட தம் மக்களின் உரிமைகள் குரலாய் ஒலிக்க இதன் பின்னால் தமிழ் மக்கள் அணிதிரளும்போது உரிமைகள் வென்று நின்மதியானதொரு வாழ்வை தமிழ் மக்கள் அனுபவிப்பர் என்பது வெள்ளிடை மாலை.

**தமிழ் மக்களின் உரிமைகளை வென்று அவர்கள் நின்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ அவர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தலைமைத்துவம் அவசிய, அவசரத் தேவையாகவுள்ளது.**





## பிரபா குழு வின் கொலை வெறிக்கு மற்றுமொரு முதுபெரும் தமிழ் அரசியல் வாதி பலி

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் நமது ஈழநாடு பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளருமாகிய சின்னத்தம்பி சிவமகாராஜா பிரபா குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றிரவு அந்தப்பகுதியில் வேட்டுச்சத்தங்கள் கேட்டதாகவும், வழமையாக காலையில் துர்க்கையம்மன் ஆலய பூசையில் கலந்துகொள்வார் என்றும் இன்று காலை அவர் பூசைக்கு வராததையடுத்து அவரது வீட்டிற்கு சென்று பார்த்தபோது அவர் சூட்டுக்காயங்களுடன் இறந்து காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தெல்லிப்பளையில் அவரது தற்காலிக வதிவிடத்தில் வைத்து நேற்றிரவு இவர் பிரபா குழுவினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு விமானத் தாக்குதலில் மாணவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. ஆனால் இத் தாக்குதலுக்கு வழிகோலியவர்கள் யார் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முதனிலைப் பொறுப்பாளர் பிள்ளையான் தெரிவிக்கின்றார்.

முல்லைத்தீவில் இலங்கை விமானப் படையினர் கடந்த 14.08.2006 அன்று மேற்கொண்ட தாக்குதலில் உயர்தர வகுப்பைச் சேர்ந்த 61 மாணவிகள் கொல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது. இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் மாணவிகள்தான் என்பதை யுனிசெப் அமைப்பும் உறுதிசெய்கின்றது. இத்தாக்குதலில் பாடசாலை மாணவிகள் கொல்லப்பட்டமை மிக வன்மையான கண்டனத்துக்குரியது. இத் தாக்குதல் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இது குறித்து அரசாங்கம் பூரண விசாரணை நடாத்தி உண்மை நிலைமையை வெளிப்படுத்த வேண்டுமென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முதனிலைப் பொறுப்பாளர் பிள்ளையான் தெரிவித்தார். முல்லைத்தீவில் நடைபெற்ற விமானத் தாக்குதல் தொடர்பாகவும் சமகால நிலமை தொடர்பாகவும் தமிழ் அலை முதனிலைப் பொறுப்பாளர் பிள்ளையானைத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறிய கருத்துக்களாவது

முல்லைத்தீவில் மாணவிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுதான். ஆயினும் இத் தாக்குதலுக்கு வழியமைத்துக் கொடுத்தவர்கள் யார் என்பது குறித்தும் இத் தருணத்தில் சிந்திக்க வேண்டும். மோதல்களும், கடுமையான விமானத் தாக்குதலும் இடம்பெற்றுவந்த நிலையில் அம் மாணவிகளை தாக்குதல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் ஒரு இடத்திற்கு பிரபா குழுவினர் அழைத்துச் சென்றமைக்கான காரணம் என்ன? வட பகுதியில் பிரபா குழுவின் நிலைகள் மீது கடுமையான விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் சமயத்தில் எவ்வித முன்னேற்பாடுகளும் இல்லாத நிலையில் தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்படக் கூடிய ஒரு இடத்திற்கு இம் மாணவர்களை அழைத்துச் செல்லவேண்டிய தேவை என்ன?

அது மட்டுமன்றி இம் மாணவிகள் பிரபா குழுவினரால் அவர்களின் விருப்பத்திற்கு மாறான வகையில் பலாத்காரமாக கடத்திச் செல்லப்பட்டதாகவே தெரியவருகிறது. ஆக இம் மாணவர்களின் படுகொலைகளில் பிரபா குழுவின் பங்கு கனமானது. ஆனால் இது குறித்து அவர்கள் கவலைப்படப் போவதில்லை. கொல்லப்பட்ட மாணவிகளின் பிரேதத்தைக் காட்டி இலாபமடையவே அவர்கள் முயற்சிக்கின்றனர். வட–கிழக்கிலுள்ள பல்லாயிரம் சிறுவர்களையும், பாடசாலை மாணவர்களையும் கடத்திச் சென்று கட்டாய ஆயுதப் பயிற்சி அளித்து அவர்களின் எதிர்காலத்தை சூனியப்படுத்தி கொலைக்களம் அனுப்பும் ஒரு பயங்கரவாதக் குழு இம் மாணவிகளின் படுகொலைகள் மூலம் தம்மைத் திருத்திக் கொள்ளும் என எதிர்பார்க்க முடியாததுதான். இன்று வட–கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் நிலமை பரிதாபகரமாகவுள்ளது. பிரபா குழுவின் தாக்குதல்களாலும், மோதல்களினாலும் நிம்மதியிழந்துள்ள மக்களுக்கு படையினரின் தாக்குதலும் நிச்சயமற்ற நிலைமையை தோற்றுவித்துள்ளது. இது மட்டுமன்றி எமது மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக மாற்றி தமிழினத்திற்கு வழிகாட்டவேண்டிய புத்திஜீவிகளையும், அரசியல் தலைவர்களையும் துரோகிப் பட்டம் சூட்டிப் படுகொலை செய்து எம் இனத்திற்கு அரசியல், அறிவியல் ரீதியில் வழிகாட்ட யாருமில்லாமல் வெற்றிடத்தை உருவாக்கிவரும் பிரபா குழுவினரின் நீண்ட கொலைப் பட்டியலில் அண்மையில் கொல்லப்பட்ட சமாதானச் செயலகத்தின் பிரதிப் பிரதானி கேதீஸ் லோகநாதனும் இடம்பிடித்திருக்கின்றார். தமக்கெதிரானவர்களுக்கு துரோகிப் பட்டம் கொடுத்து கொலை செய்யும் பிரபா குழுவின் கொலைக் கலாச்சாரம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

தமக்கெதிரான கருத்துக்களைச் சகித்துக்கொள்ள முடியாமலும், தமிழ் மக்களுக்கு நல்லது செய்துவிடுவார்கள் என்ற அச்சத்தினாலும் பிரபா குழுவின் கொலைப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. தமது பிரச்சினைகளை துப்பாக்கி மூலம் தீர்க்க முற்பட்டமை எமது இனத்திற்கு இன்று மாபெரும் சாபக்கேடாக மாறியுள்ளது. இந் நிலைமை இனியும் தொடரக்கூடாது. தற்போது வடகிழக்கில் இடம்பெற்றுவரும் மோதல்களில் சிக்கி அல்லல்ப் படுபவர்கள் அப்பாவியான பொதுமக்களே. மோதலில் ஈடுபடுபவர்கள் யாராக, எத்தரப்பினராக இருந்தாலும் மனித உரிமைக்கு மதிப்பளித்து செயற்படவேண்டும். இதேபோன்று மோதல்களினால் இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் மக்களின் குடியிருப்புகளும், மக்கள் தஞ்சமடைந்துள்ள இடங்களும் தாக்குதல் இலக்காக மாறக்கூடாது. இதுகுறித்து தாக்குதலில் ஈடுபடுபவர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் எனவும் முதனிலைப் பொறுப்பாளர் பிள்ளையான் தெரிவித்தார்.

# சமாதான செயலக பிரதிச் செயலாளர் கேதீஸ்வரன் லோகநாதன் பிரபா குழு வினரால் படுகொலை பிரபா குழு வின் முக்கியஸ்தர்கள், முக்கிய ஆதரவாளர்கள் பாதுகாப்பாக கொழு ம்பில் பழி வாங்கும் படலம் தொடர்ந்தால் நிலமை என்னவாகும்



அரசாங்க சமாதானச் செயலக பிரதிச் செயலாளர் கேதீஸ்வரன் லோகநாதன் கடந்த 12.08.2006 அன்று இரவு 9:30மணியளவில் கொழும்பு தெஹிவளைப் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து மோட்டார் வாகனம் ஒன்றில் வந்த பிரபா குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பிரபா குழுவின் ஜனநாயகத்திற்கு விரோதமான, கொலைக்கலாச்சாரத்தை கண்டித்த கேதீஸ்வரன் லோகநாதனின் இறுதிப் பயணத்தை பிரபா குழுவின் துப்பாக்கிக் குண்டுகள் முடித்திருக்கின்றன. பிரபா குழுவினரால் கொல்லப்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழ் புத்தி ஜீவிகளின் நீண்ட பட்டியலில் இறுதியாக கேதீஸ்வரன் லோகநாதனும் இடம் பிடித்திருக்கின்றார். இலங்கையின் தலைநகரான கொழும்பில் வைத்து சமாதானச் செயலக பிரதிச் செயலாளரை சுட்டுக்கொன்றுள்ளனர் பிரபா குழுவினர். ஆனால் இதே கொழும்பில் பிரபா குழுவின் முக்கிய ஆதரவாளர்களும், அவர்களின் பினாமி நிறுவன முக்கியஸ்தர்களும் பாதுகாப்புடன் வாழ்கின்றனர். எந்த சிங்கள அரசை வெறுத்து அவ்வரசுடன் இணைந்து செயற்படுகின்றனர் என்று கூறி பல நூறு பேரை சுட்டுக் கொன்றனரோ அந்த அரசின் சலுகைகளுடனும், பாதுகாப்புடனும் பிரபா குழுவின் முக்கியஸ்தர்களும், ஆதரவாளர்களும் உல்லாசமாக வாழ்வது மட்டும் துரோகமில்லை!

பிரபா குழுவின் பினாமி நிதி நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழக முக்கியஸ்தர்கள் தமது தலைமை அலுவலகத்தையும் கொழும்பில் வைத்துக்கொண்டு அங்கு பாதுகாப்புடன் இருக்கின்றனர். அதேபோல பிரபா குழுவின் முக்கிய ஆதரவாளர்களும் கொழும்பில் பாதுகாப்புடன் வாழ முடிகின்றது. இவ்வளவும் ஏன் பிரபா குழுவின் முக்கியஸ்தர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டால் கூட கொழும்பில் பாதுகாப்பாக மருத்துவ சிகிச்சை பெற முடிகின்றது. அதனால் இதே கொழும்பில் பிரபா குழுவுக்கு எதிரான கருத்துடையவர்கள் மட்டும் உயிர் வாழ முடியாதுள்ளது.

இதே நிலைமை மாறி கொழும்பில் உள்ள பிரபா குழுவின் ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்களும் தாக்கப்பட ஆரம்பித்தால் நிலைமை என்னவாகும். கொழும்பில் ஊடுருவிய பிரபா குழுவினரால் மாற்றுக் கருத்துடையவர்களைக் கொல்ல முடியுமென்றால் கொழும்பிலுள்ள பிரபா குழுவின் ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்களைக் தாக்க நினைப்பவர்களுக்கு அது ஒன்றும் பெரிய விடயமல்ல. ஆனால் இதனால் மிஞ்சப்போவது என்ன? இதனால் மரணித்து போவது யாரோ ஒரு தமிழன். இது தமிழ் இனத்திற்கு ஆரோக்கியமான விடயமல்ல. ஆக பிரபா குழுவினரும், அவர்களை கண்மூடித்தனமாக ஆதரிப்பவர்களும் ஒன்றை நன்கு உணரவேண்டும். கருத்துக்களை கருத்துக்களால் அன்றி ஆயுதம் கொண்டு அழிக்கக் கூடியது பிரபா குழுவினரால் மட்டும் சாதிக்கக் கூடியதொன்றல்ல.

## பிரபா குழு வினரை முற்றாக அழிப்பதற்கு இன்னும் சிறிது காலமே தேவை என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவே படையினர் வடக்கு–கிழக்கில் நிலைகொண்டுள்ளனர். கடந்த இரண்டு தசாப்த போரில், பிரபா குழுவினரே தமிழ் மக்களைக் கொன்றுள்ளனர், படையினரல் அல்ல என்று இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதாவது படையினருக்கு தமிழ் மக்கள் மீது எந்தக் கோபமும், வெறுப்போ கிடையாது. அவர்களைப் பாதுகாப்பதுதான் படையினரின் பிரதான செயற்பாடாக உள்ளது. பிரபா குழுவினர் மிகவும் பலவீனமடைந்துள்ளனர். அவர்களை முற்றாக அழிப்பதற்கு இன்னும் சொற்ப காலமே தேவை. மாவிலாறு தாக்குதலை பிரபா குழுவினர் தொடுத்த நாளிலிருந்து இன்றுவரை, அவர்களது ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகளை நமது படைகள் அழித்துவிட்டன. இப்போது பிரபா குழுவின் படையில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள், சிறுவர்களே உள்ளனர். புதுக்குடியிருப்பில் பிரபா குழ்வின் முகாம் மீதே தாக்குதல் நடாத்தப்பட்டது. முல்லைத்தீவு காட்டுக்குள் இருந்த முகாமொன்றில், படையில் சேரும் சிறுவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும்போதே நாம் தாக்குதல் நடாத்தினோம். அதில் 300–க்கும் அதிகமான சிறு வயதுப் போராளிகள் கொல்லப்பட்டனர். ஆனால், அங்கிருந்து ஏராளமான போராளிகளின் உடல்களை பிரபா குழுவினர் வேகமாக அகற்றிவிட்டனர்.

மனித நடமாட்டமே இல்லாத அடர்ந்த காட்டுப்பகுதியில் பாடசாலை சிறுமிகள் ஏன் தங்கியிருக்க வேண்டும்? அவர்களிடம் துப்பாக்கி ஏன் இருக்க வேண்டும்? ஆயுதக்கிடங்கு அங்கே எப்படி வந்தது? அதனால், இந்த இடத்தில் பிரபா குழுவின் பயிற்சியே இடம்பெற்றது. படையினரின் தாக்குதலை யாரும் குற்றம் சொல்ல முடியாது. தெல்லிப்பழையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சின்னத்தம்பி சிவமகாராஜா சுடப்பட்டார் என்ற தகவல் உண்மைக்குப் புறம்பானது. எனக்குக் கிடைத்த தகவலின்படி, ஞாயிற்றுக்கிழமை மாலை 7:30 மணியளவில், அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளே அவரைச் சுட்டார்கள்.

தற்போது இராணுவ தரப்பில் கிடைத்துள்ள உயர்மட்ட தகவல்களின்படி, பிரபா குழுவின் அமைப்பிலிருந்து பல உறுப்பினர்கள் விலகி, இராணுவ முகாம்களிலும் சோதனைச் சாவடிகளிலும் சரணடைகிறார்கள் என்றார் சரத் பொன்சேகா. ஓகஸ்ட் 11 ஆம் திகதி தாக்குதல்கள் ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை, படைத்தரப்பில் 131 படையினர் கொல்லப்பட்டதுடன், 175 பேர் காயமடைந்துள்ளனர் என்று பிரிக்கேடியர் பிரசாத் சமரசிங்க உறுதிப்படுத்தினார். இராணுவத்தினர், தங்களது நிலைகளை தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அவ்வப்போது பிரபா குழுவினர் ஆட்டிலெறி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். படையினர் வலிந்த தாக்குதலில் ஈடுபடவில்லை. தற்காப்பு நடவடிக்கைகளையும் பதில் தாக்குதல்களையுமே மேற்கொண்டு வருகிறோம் என்று மேலும் தெரிவித்தார்.

## யாழ்குடா நாட்டுத் தோல்வி தொடர்பாக பிரபா குழு வின் முக்கியஸ்தர்களிடையே கடும் கருத்து முரண்பாடு

யாழ்குடா நாட்டின் மீது பிரபா குழுவினர் வலிந்து மேற்கொண்ட தாக்குதல் கடும் தோல்வியில் முடிவடைந்து பலத்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளது தொடர்பாக பிரபா குழுவின் முக்கியஸ்தர்களிடையே கடும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை மூன்று தினங்களில் கைப்பற்றலாம் என்ற நோக்கில் பிரபா குழுவினால் நடாத்தப்பட்ட தாக்குதல் சுமார் 350 பிரபா குழுஉறுப்பினர் வரை கொல்லப்பட்டு பலத்த தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இத்தாக்குதல் தோல்வியானது இதுவரை காலம் பிரபா குழுவினால் கூறப்பட்டு வந்த மிகைப்படுத்தப்பட்ட அவர்களின் இராணுவ பலத்தின் மீது பெரும் அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது. பால்ராஜ், சூசை ஆகிய பிரபா குழுவின் முக்கிய தளபதிகளினாலேயே யாழ் தாக்குதல் திட்டமிட்டு நடாத்தப்பட்டது. இது தோல்வியடைய பாலக்குமார் எனப்படும் பிரபா குழுவின் இரண்டாம் பட்சத் தளபதியின் தலைமையில் ஊர்காவற்துறைப் பகுதியில் பிரபா குழுவினர் தரையிறங்கிய போதும் இராணுவத்தினரால் அது முறியடிக்கப்பட்டது. இதில் பிரபா குழுவுக்கு பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

இவைகள் தொடர்பாக தமிழ்ச்செல்வன், பொட்டன், சூசை, பால்ராஜ் போன்ற பிரபா குழுவின் முக்கிய தளபதிகளிடையே கடும் கருத்து முரண்பாடு தோன்றியுள்ளதாகவும், இத்தாக்குதல் தோல்விக்கு ஒழுங்கான திட்டமிடல், துணிச்சலான வழிநடாத்தல் என்பன இல்லாமையும், புலனாய்வுத் தகவலில் கிடைத்த தவறான செய்திகளுமே காரணம் என பெரும்பாலான பிரபா குழு உறுப்பினர்கள் கருதுவதனாலும், வன்னித் தலைமை பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக தெரியவருகின்றது. இந் நெருக்கடி பிரபா குழுவுக்குள் ஒரு துப்பாக்கி மோதலைத் தோற்றுவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுப்போன தனி ஈழக் கொள்கை.

தொடர் -05

வள்ளுவன்



வழங்கப்பட்டது.

வன்முறைகளைத் தூண்டுவோரை சுட்டுக் கொல்லுமாறும் ரகசிய உத்தரவு வழங்கப்பட்டது. இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களையும், வன்முறையாளர்களையும் இராணுவம் கடுமையாக அடக்கியது. பல காடையர்களும் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனிடையே பௌத்த பிக்குகளும் ஒப்பந்தத்திற்கு எதிராகத் தூண்டிவிடப்பட்டனர். சில பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட எல்லைமீறிப் போனால் அவர்களையும்

முக்கிய விடயங்களை கைச்சாத்திடுவதற்கு முன் வெளிப்படுத்த வேண்டாம் என இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேரடியாக ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனவிடம் இதனைக் கூறினார். ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன் அதிலுள்ள முக்கிய விடயங்களை தெரிந்துகொண்டால் அதனால் விரும்பத் தகாத சில சங்கடங்கள் ஏற்ப

றீகன் இதற்காக இந்தியப் பிரதமரின் துணிச்சலான நடவடிக்கையையும் பாராட்டியிருந்தார். அத்துடன் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும் இந்தியாவின் ஆர்வத்திற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் தெரிவித் திருந்தார்.

**ஜே.ஆர் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்**

ஒப்பந்தம் குறித்த விபரங்களையும், அதன் பிரதி ஒன்றையும் அமெரிக்காவுக்கு வழங்கியமை புலனாகியது. இந்தியாவுடன் நட்புக்கரம் நீட்டிக்

## ஒப்பந்தத்திற்கு எதிரான எந் நிலைப்பாட்டையும் அமெரிக்கா உள் ளிட்ட மேற்கத்தேய நாடுகள் எடுக்கவில்லை. அவை ஒப்பந்தத்தைப் பாராட்டியிருந்தன.

**இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரான தெற்கின் உணர்வலையும் ஜே.ஆரின் பயமும்**

வடகிழக்கில் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கெதிராகவும், இந்தியப் படைகளுக்கு எதிராகவும் கருத்துக்களை மக்கள் மனங்களில் ஏற்படுத்தும் நடவடிக்கையில் புலிகள் மறைமுகமாக தீவிரமாக ஈடுபட்டனர். இந்தியப் படையினருடன் தொடர்புகளை பேணுவோருக்கு பினாமிப் பெயர்களில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதே சமயம் ஒப்பந்தத்திற்கு எதிரான உணர்வலைகள் பரவலாக சிங்கள மக்கள் மத்தியில் காணப்பட்டது. ஒப்பந்தம் குறித்த பூரண விளக்கமின்மையும், இந்தியா தமிழ் மக்களுக்கும், தனிஈழத்திற்கும் ஆதரவானது எனும் கருத்து சிங்கள மக்கள் மத்தியில் ஊன்றியமையும் இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

இது மட்டுமன்றி பிரதமர் பிரேமதாசாவும், அமைச்சரவையிலுள்ள சில முக்கிய அமைச்சர்களும் இவ்வொப்பந்தத்தை எதிர்த்தனர். குறிப்பாக பிரதமர் பிரேமதாசாவும், தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் ஒப்பந்தத்திற்கு எதிராக ஊடகங்களைத் தூண்டிவிட்டனர். ஒப்பந்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டை இராணுவ, பாதுகாப்பு அமைச்சின் முக்கிய உயரதிகாரிகள் சிலரும் கொண்டிருந்தனர்.

இதனால் இராணுவ உயர் அதிகாரிகளின் உதவியுடன் பிரேமதாசாவும், லலித் அத்துலத் முதலியும் ஆட்சியைப் பிடிக்கலாமென ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன அஞ்சினார். இதனால் ஜனாதிபதி இராணுவ உயர் மட்டங்களில் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் தினமும் அன்றாட நிகழ்வு தொடர்பான அறிக்கையை தமக்கு சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் உத்தரவிட்டார்.

இதைவிட இந்தியத் தூதர் கே.என். திக்ஸித்தை நேரடியாக சந்தித்து தனது அச்சத்தையும் வெளிப்படுத்தினார். இலங்கை ஜனாதிபதியின் பதவிக்கோ, உயிருக்கோ எவ்வித ஆபத்து ஏற்படுவதை இந்தியா அனுமதிக்காது என அவரிடம் உறுதி கூறப்பட்டது. அத்துடன் இலங்கை ஜனாதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பாகவும் சில முக்கிய ஆலோசனைகளையும், உதவிகளையும் இந்தியா வழங்கியது.

சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகள் ஒப்பந்தத்திற்கு எதிராக மக்களை பாரியளவில் தூண்டிவிட்டன. இவை பாரிய வன்முறைகளாகவும் வெடித்தன. கொழும்பில் காடையர்களை முன்னிலைப்படுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டன. இவ்வார்ப்பாட்டங்கள் வன்முறைகளாக வெடித்தன. எனவே ஆர்ப்பாட்டக் காரர்களையும், கலகக்காரர்களையும் அடக்கும் பொறுப்பு இராணுவத்திடம்

சுடுமாறு மிக ரகசிய உத்தரவொன்று ஜனாதிபதிக்கு வேண்டிய சில இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. இதனால் சில பௌத்த பிக்குகள் சுடப்பட்டனர். அதனால் அவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளித்த சமயம் அவர்கள் உண்மையான பௌத்த பிக்குகள் இல்லை எனவும் சில இளைஞர்களை பௌத்த பிக்குகள் வேடம் பூண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தியமை புலனாகியது. இத்திட்டத்தின் பின்னணியில் சுதந்திரக் கட்சியின் அன்றை முக்கிய தலைவரான அனுர பண்டார நாயக்க இருந்ததாக பரவலாகப் பேசப்பட்டது.

வன்முறைகளுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் எதிராக ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன கடுமையான நடவடிக்கை மேற்கொண்டதனால் நாட்டில் கொந்தளிப்பான நிலைமை தவிர்க்கப்பட்டது. இதனால் சதி நடவடிக்கை குறித்து சிந்தித்தவர்கள் கூட அடக்கி வாசிக்க ஆரம்பித்தனர்.

ஜனாதிபதியின் விஷேட பணிப்பின் பெயரில் பிரதமர் பிரேமதாசா, தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சில முக்கிய இராணுவ உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகள் தேசிய புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டதாகவும் இதற்கு இந்தியாவின் றோவும் உதவி செய்ததாக அப்போது பரவலாகப் பேசப்பட்டது.

இதற்கிடையில் 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி ஜே.ஆர் ஜயவர்த்தனவைக் கொலை செய்யும் சதி முயற்சி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றத் தொடரை மீண்டும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன பாராளுமன்றம் வந்தபோது அவர்மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மயிரிழையில் ஜனாதிபதி தப்பியபோது உடன்வந்த பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி காயமடைந்தார். அத்துடன் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்கள் சிலரும் காயமடைந்தனர்.

இத்தாக்குதலை ஜே.வி.பியினரே மேற்கொண்டதாக பொலிசார் கூறினர். பாராளுமன்றத்தில் கடமையாற்றிய ஜே.வி.பியின் ஆதரவாளர் ஒருவர் சர்தேகத்தில் கைதுசெய்யப்பட்டார்.

**ஜே.ஆரின் இரட்டை வேடம்**

இதேவேளை இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன கடைப்பிடித்த இரட்டை வேடம் விரைவில் அம்பலத்திற்கு வந்தது. இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் காலூன்ற இலங்கை அரசு இடங்கொடுத்தமையும் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

இந்நிலையில் இந்திய ஒப்பந்தம் தொடர்பான

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரமர் இலங்கை வந்த சமயம் ஜனாதிபதி மாளிகையில் தேனீர் விருந்துபசாரம் ஒன்று நடைபெற்றது. அப்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகவிருந்த ஜேம்ஸ் ஸ்பெய்ன் அங்கு வருகை தந்தார். அவர் இலங்கைக்கான இந்தியத் தூதர் டிக்ஷித்திடம் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனின் முக்கிய செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நேரடியாகக் கையளிக்க வேண்டும் எனவும் அதற்கான ஒழுங்குகளை செய்து தருமாறு வேண்டினார்.

டிக்ஷித்தும் பிரதமர் ராஜீவ் காந்தியை அணுகி அமெரிக்கத் தூதர் சந்திக்க வந்திருப்பதைத் தெரிவித்தார். அமெரிக்கத் தூதர் இந்தியப் பிரதமரைச் சந்தித்து அமெரிக்க ஜனாதிபதியின் தனிப்பட்ட செய்தி அடங்கிய ஆவணம் ஒன்றை கையளித்தார். இவ்வாவணம் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னரேயே இந்தியப் பிரதமரிடம் வழங்கப்பட்டது. அதில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தைப் பாராட்டியிருந்த அமெரிக்க ஜனாதிபதி

கொண்டதாகக் கூறப்பட்டது. அத்துடன் அமெரிக்காவுடன் ஜே.ஆர் கொண்டிருந்த ரகசிய உறவையும் இது அம்பலபடுத்தியது.

திருமலையில் அமையப் பெற்றிருந்த voice of america ஒலிபரப்பு நிலையம் தொடர்பாகவும் திருமலைத் துறைமுகத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய கப்பல்கள் வருவது தொடர்பாகவும் இந்தியப் பிரதமர் அதிருப்தி தெரிவித்திருந்தமையும், அதனையும் இலங்கை ஜனாதிபதி அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

ஆனாலும் ஒப்பந்தத்திற்கு எதிரான எந் நிலைப்பாட்டையும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் எடுக்கவில்லை. அவை ஒப்பந்தத்தைப் பாராட்டியிருந்தன. இதேவேளை மேற்கத்தேய உறவுடன் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தாமல் இருப்பதற்கான துணிவும், திறனும் இலங்கையிடமும் இருக்கவில்லை.

தொடரும்.

## மக்கள் இடம்பெயர்வும், தொடரும் மோதலும் வட-கிழக்கில் பெரும் மனிதாபிமான நெருக்கடிகளை உருவாகலாம் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கின்றது.

படையினருக்கும், பிரபா குழுவினருக்கும் இடையிலான மோதல்களினால் இலங்கையின் வட-கிழக்கில் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்திருப்பது மிக மோச மான மனிதநேயப் பிரச்சினைகளை ஏற் படுத்துமென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று எச்சரித்திருக்கிறது. தொடரும் மோதல்களின் பின்னணியில் யாழ் குடாநாட்டில் ஊரடங்குச் சட் டம் தொடர்ந்து அமுல்படுத்தப்படுமானால் யாழ் குடாநாட்டில் இயல்புநிலை வெகுவாகப் பாதிக்கப்படலாமென்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவின் ஐ.ஏ.என்.எஸ் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்திருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் டேவிட் விக்னாட்டி, யாழ் குடாநாட்டில் இதுவரை சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்று கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

யாழ் குடாநாட்டில் தொலைத் தொடர்பு பாதிக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் வெளியிடங்களில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தொடர்பு களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செயற்பட்டுவருகிறது. ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலாக் கப்படுமானால் குடாநாட்டின் நிலைமை மோசமடையும். குடாநாட்டில் மருத்துவப் பிரச்சினைகள் இப்போதைக்கு இல்லையாயினும் கூட உணவு, சுத்தமான குடிதண்ணீர் போஷாக்குப் பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியம் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு தடுக்கப்பட்ட தீர்வுகள் திம்பு தொடக்கம் இன்றுவரை.

## வரலாற்றுத் தொடர்...~ 05

புலவன்




### திம்புப் பேச்சுவார்த்தையின் தோல்வியும், அழிவுகளின் தொடர்ச்சியும்

இந்திய அரசின் அதிரடி நடவடிக் கையைத் தொடர்ந்து புதுடில்லி சென்ற போராட்ட இயக்கங்கள் இந்திய உயர் மட்டத் தலைவர்களையும் உயரதிகாரிக ளையும் சந்தித்தனர். இச்சந்திப்பின் போது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் கான தீர்வுகள் குறித்துப் பேசுவதைவிட தம்மைப் பலப்படுத்துவது தொடர்பில் இந்திய அரசின் உதவிகள் குறித்துப் பேசுவதிலேயே அதிக கவனம் காட்டினர். போராட்ட இயக்கங்களின் கீழ் நிலைப்பாடு இந்திய அரசுக்கு சலிப்புணர்வை ஏற்படுத்தியது.

போர் நிறுத்தம் மீண்டும் கடைப்பிடிக்கப் பட்டு அது மீறப்படாமலிருப்பது நிரூபிக் கப்பட்டால் மாத்திரமே அனுகூலமான தொரு சூழ்நிலையில் மீண்டும் பேச்சுக் கள் தொடங்கப்படலாமென இந்திய அரசு உறுதியாக நம்புகின்றது எனவே அவ்வாறானதொரு நிலைக்கு இலங்கை அரசும், தமிழ் போராட்ட இயக்கங் களும் வரவேண்டும். இந்நிலையில் திம்புப் பேச்சுக்கள் ஒத்திவைக்கப் படுகின்றன என கொழும்பில் வைத்து இலங்கைக்கான இந்தியத் தூதர் கே.என் டிக்ஷித் அறிவித்தார்.

இலங்கை அரசாங்கம் தமிழ்ப் போராட்ட இயக்கங்கள் இரண்டினதும் விட்டுக் கொடுக்காத தன்மை, வன் முறைகளில் கொண்ட அதீத ஆர்வம் காரணமாக தீர்வுகள் எட்டப்படாமல் திம்புப் பேச்சுவார்த்தை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

தமிழ்ப் போராட்ட இயக்கங்களின் ஒற்றுமை, இந்தியாவின் வலுவான பின் புல ஆதரவு என்பவற்றுடன் இலங்கை யில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வுகளைக் காணக்கூடிய அரிய வாய்ப்பை திம்புப் பேச்சுவார்த் தை உருவாக்கியது. ஆனால் அது சில சுயநலக் காரணங்களினாலும், அதிகார மோகத்தினாலும் தட்டிவிடப்பட்டது. இதில் அன்று தமிழ் மக்களின் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய அனைத்துப் போராட்ட இயக் கங்களுக்கும், மிதவாத தமிழ் தலைமைக்கும் கணிசமான பங்கு உண்டு. ஒருவகையில் இது தமிழ் மக்க ளுக்கான வரலாற்றுத் துரோகமும் கூட.

தம்மின மக்களின் எதிர்காலம் குறித்த தொலைநோக்கும், தம்மின மக்களின் நலன் குறித்த பொறுப்புணர்வும் அன்று திம்புவில் இந்திய உதவியுடன் தமிழத் தரப்புப் பிரதிநிதிகளினால் வெளிப்படுத் தப்பட்டிருக்குமானால் தமிழ் மக்களுக்கு ஏற்படவிருந்த பின்னாளைய அவலங்க ளும், அழிவுகளும் தடுக்கப்பட்டு நின்ம தியான வாழ்வு மக்களுக்குக் கிடைத் திருக்கும்.

தவறான சம்பவங்களால் வழிநடாத்தப் படும் தன்மை, உணர்ச்சி பூர்வமான அணுகுமுறை, கள நிலைமைகள் பற்றிய தெளிவான புரிந்துணர்வுக்கு கற்பனைகளுடன் கூடிய அதீத நம்பிக் கை போன்றன திம்புவில் தமிழ்த் தரப்புப் பிரதிநிதிகளிடம் மேலோங்கிக் காணப்பட்டன. இவை தமிழ் மக்களை மீண்டும் அழிவுக்கு இட்டுச் செல்லுமென அவர்கள் உணராமை அவர்களின் அறியாமையா? இல்லை உணர்ந்திருக் கும் தம் ஆதிக்கத்திற்கான மௌனமாக இருந்தார்களா என்பது தெரியவில்லை.

திம்புப் பேச்சுவார்த்தையின் முறிவைத் தொடர்ந்து போராட்ட இயக்கங்கள் படையினருக்கெதிரான, அரச சொத்துக் களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக் கையில் தீவிரம் காட்டின. திம்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண் டிருந்த நேரத்தில் யாழ்குடா நாட்டிலுள்ள படைமுகாம்களைச் சூழ போராட்ட இயக்கங்கள் தமது நிலைகளை ஏற்படுத்தியிருந்ததால் தாக்குதல் மேற் கொள்வதற்கு அவர்களுக்கு இலகுவாக இருந்தது.

புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்றன படையினருக்கு எதிரான தாக்குதல்களில் தீவிரம் காட்டின. இதனால் படையினரால் தமது முகாம்களை விட்டு வெளியேற முடியாத நிலை காணப்பட்டது. யாழ்குடாநாட்டில் முற்றுகைக் குள்ளாக்கப்பட்ட படையி னரை மீட்கவும், தொடர்புகளை ஏற்படுத்தவும் இராணுவத் தலைமையகம் பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அவை பயனளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து இறுதியாக யாழ் ..... மலையில் உலங்கு வானூர்திகளில் படையினரை இறக்கி முன்னேறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் எல்லாப் போராட்ட இயக் கங்களும் ஒருமித்து இந்நடவடிக்கையை எதிர்த்து பதில்த் தாக்குதல் நடாத்தி யதனால் அம் முயற்சியும் தோல்வி யடைந்தது.

தமிழ்ப் போராட்ட இயக்கங்களில் நிலவிய ஒற்றுமையும், ஒருமித்த எண்ணப் பாடும் நீண்டநாள் நீடிக்கவில்லை. 1986ம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதி சகோதர இயக்கங்கள் மீதான தமது ஆதிக்கத்தை புலிகள் நிலைநாட்ட முனைந்தபோது சிங்களப் பேரினவாதம் கைகொட்டிச் சிரித்தது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் திசைமாறிச் செல்ல ஆரம்பித்தது. அன்று புலிகள் ஆரம்பித்த சகோதரப் படுகொலைகள் இன்றுவரை தொடர்கின்றது. (இது தொடர்பாக தோற்றுப்போன தனிஈழத் தொடரில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது)

சகோதர இயக்கங்களைத் தடைசெய்து கொன்று குவித்தபின் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தம்மைத் தாமே பிரகடனம் செய்தனர். இனப்பிரச் சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் தம்முடன் மட்டுமே நடாத்தப்பட வேண்டும் எனக் கூறினர்.

### மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை முயற்சி, பெங்களூர் சந்திப்பும் அதற்கான பின்னணியும்.

அன்று புலிகளின் இராணுவ பலம் மேலோங்கிக் காணப்பட்டமையினாலும், ஏனைய இயக்கங்கள் வடகிழக்கில் செயலிழந்தமையினாலும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக புலிகளுடன் பேசுவதுதான் உகந்தது எனும் எண்ணப்பாட்டிற்கு இந்திய இலங்கை அரசாங்கங்கள் வந்தன. 1986ம் ஆண்டு டிசம்பர் மாதம் இது தொடர்பாக சில தொடர்புகளை இந்திய அரசாங்கம் புலிகளுடன் ஏற்படுத்தியது. இதன்மூலம் தமிழ் மக்களின் அரசியல், இராணுவத் தலைமைத்துவம் புலிகளிடம் கைமா றியது. இதனை மறைமுகமாக இந்திய, இலங்கை அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்டன.

இந்நிகழ்வுகள் தொடர்பாக இலங்கைக் கான இந்தியத் தூதர் கே.என். டிக்ஷித் தனது **colombo assignment** என்ற நூலில் இவ்வாறு எழுதியிருந்தார்.


**இலங்கை அரசாங்கம் தமிழ்ப் போராட்ட இயக்கங்கள் இரண்டினதும் விட்டுக் கொடுக்காத தன்மை, வன் முறைகளில் கொண்ட அதீத ஆர்வம் காரணமாக தீர்வுகள் எட்டப்படாமல் திம்புப் பேச்சுவார்த்தை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.**


இலங்கைப் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் எச். டபிள்யு. ஜயவர்த்தனா, இந்திய வெளியுறவுச் செயலாளர் ராமேஸ் பண்டாரி, இந்தியாவின் அரசியலமைப்பின் நிபுணர் பாலகிருஷ்ணன் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் டில்லி ஒப்பந்தம் **(Delhi Agreement)** அமுலுக்கு வந்தது. இவ்வொப்பந்தம் கைவிடப்படக் கூடாது என்பதற்காக இந்திய வெளியுறவுச் செயலாளர் ரமேஸ் பண்டாரி 1986 பெப்ரவரி 03ந் திகதி கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டார். ஆனால் இவ்வெப்பந்தம் சிங்கள மக்களுக்கு ஏற்புடையதல்ல என்று கூறி இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜயவர்த்தன டில்லி ஒப்பந்தத்தை நிராகரித்தார். இலங்கை யின் எதிர்க்கட்சித் தலைவர்கள் அரச முக்கிய தலைவர்களைச் சந்தித்து இவ்வொப்பந்தத்தின் முக்கியத்துவம் பற்றி இந்திய வெளியுறவுச் செயலாளர் எடுத்துக் கூறியபோதும் அதனால் எப்பயனும் அடையப் பெறவில்லை.

இந்நிலையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ரமேஸ் பண்டாரி ஓய்வுபெற அவரின் இடத்திற்கு ஏ.பி. வெங்கடேஸ் வரன் நியமனம் பெற்றார். 1986ம் ஆண்டு நவம்பரில் நடைபெறவிருந்த தென்னா சியப் பிராந்திய ஒத்துளைப்பு மாநாட்டில் (saarc) இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் நேரடிச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச் சந்திப்பைப் பயன்படுத்தி இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கைத் தரப்பில் உறுதியான இணக்கப் பாடொன்றை பெறவேண்டுமென்பது இந்தியப் பிரதமரின் எண்ணமாகவிருந்தது.

இதனடிப்படையில் 1986 ஏப்ரல் 30ந் திகதி இந்திய மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், நட்வர்சிங் ஆகியோரை கொழும்புக்கு அனுப்பிவைத்தார் ராஜீவ்காந்தி. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை இந்திய நாடுகளுக் கிடையில் இணக்கப்பாடொன்றைக் காணவும் இந்தியா பெரிதும் முயன்றது.

திம்புப் பேச்சுவார்த்தை முறிவடைந் ததைத் தொடர்ந்து இந்தியா இலங்கை ஜனாதிபதி மீதும் அதிருப்தியுற் றிருந்தது. இதனை உணர்ந்துகொண்ட ஜே.ஆர். ஜயவர்த்தன சில விட்டுக் கொடுப்புகளை செய்ய முன்வந்தார். ஆனால் நிதி, சட்டம் பாதுகாப்பு போன்ற விடயங்களில் எவ்வித விட்டுக் கொடுப்பையும் மேற்கொள்ள முன்வர வில்லை. ஆனாலும் இலங்கை ஜனாதிபதியின் விட்டுக்கொடுப்பு

தரப்பில் கூறப்பட்டது.

இந்நிலையில் 1986ல் ஜூன் மாதம் இலங்கையில் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார் ஜனாதிபதி ஜே.ஆர். அனால் இதனை முக்கிய எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சி புறக்கணித்தது. கடும் போக்குள்ள சிங்களக் கட்சிகளையும் ஜே.ஆர் சர்வகட்சி மாநாட்டிற்கு அழைக்கவில்லை. அக்டோபர்வரை நீடித்த இச் சர்வகட்சி மாநாட்டில் 1978ம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசிய லமைப்புத் திருத்தங்களை நடை முறைக்குக் கொண்டு வருவது, மாகாணங்களுக்குச் சட்டம், ஒழுங்கு பராமரிப்பதற்கான அதிகாரங்களை வழங்குவது, மாகாண நீதித் துறையை வழங்கி உட்பட்ட ஐம்பது பக்க அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டது. எனினும் இவ்வறிக்கையில் தமிழ் மக்களின் பிரதான கோரிக்கைகள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவை குறித்து எதுவுமே பேசப்பட வுமில்லை.

இவ்வாறான நிலையில் சார்க் மாநாட்டிற்கான ஆயத்தப்பணிகள் தீவிரம் பெற்றன. இம் மாநாட்டில் சமர்ப்பிக்கவென கிழக்கு மாகாணத்தை மொழி, சமய அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கும் டிசம்பர் 19 ஆலோசனைகள் எனும் திட்மொன்றை ஜே.ஆரின் அரசாங்கம் தயாரித்தது. அம்பாறை மாவட்டத்தை ஊவா மாகாணத்துடன் இணைப்பது எனவும். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் முஸ்லிம் மக்களுக்குத் தனியான, பிராந்திய சபையை ஏற்படுத்துவது எனவும். திருகோணமலைத் துறைமுகம் தவிர தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளை வடமாகாணத்துடன் இணைப்பது பற்றியும் டிசம்பர் 19 திட்டத்தில் ஆலோசனை கூறப் பட்டிருந்தது.

தொடரும்............

### பாரிய தாக்குதலுக்காக கொழும்பில் பிரபா குழுவினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு மீட்பு

கொழும்பு பொரளைப் பகுதியில் பிரபா குழுவினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 15கிலோ கிராம் எடையுள்ள கிளைமோர்க் குண்டு படையினரால் 22.08.06 காலை 10:30மணியளவில் மீட்கப்பட்டுள்ளது. சைக்கிள் ஒன்றில் மரக்கறிப் பெட்டியொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இக்குண்டு பாரிய அழிவை ஏற்படுத்தும் நோக்கிலேயே பிரபா குழுவினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் இது கண்டுபிடிக்கப் பட்டதினால் பெரும் அனர்த்தம் ஏற்படுவது தடுக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இக்கிளைமோர்க் குண்டு தொடர்பான விசாரணைகளை குற்றத் தடுப்பு பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கிழக்கு நோக்கி...

பேராசிரியர் அறுகம்குட்டிப் போடியார் அவுஸ்திரேலியாவிலிருந்து (தொடர் 09)



அரசியல் மாற்றங்களில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் காட்டிவந்த அக்கறைகள் அதிகார அந்தஸ்தில் அதுவரை திளைத்த யாழ்ப்பாணத் தலைமைகளுக்கு உவப்பளிக்கவில்லை என்பதை மேலே கண்டோம்.

ஆகவே அரசியல் விழிப்புணர்வுகள் பரந்துபட்ட மக்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாயிருந்தனர். அதற்காகவே வெள்ளையாட்சி யாளர்களின் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளை கடுமையாக எதிர்க்கவும் துணிந்தனர். குறிப்பாக அரசியல் சீர்திருத்தத்திற்கான டொனமூர் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் எல்லா பிரசைகளுக்கும் தமது தலைமைகளை தெரிவுசெய்யும் வாய்ப்பை வழங்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்படுவதை கடுமையாக எதிர்த்து விளக்கமளித்தனர். சர்வனவாக்குரிமை வழங்கப் பட்டால் அது இந்து மத வாழ்க்கை முறைக்கு பழிகேடு விளைவிக்கும் என்றும் கும்பலாட்சிக்கு வழிவகுக்கும் என்றும் வாதிட்டார் சேர்.பொன்.இராமநாதன். அதாவது யாழ்ப் பாணத்திலுள்ள உயர்சாதிப்பிரிவை தவிர மற்றயோரும் கிழக்கிலிருக்கும் முஸ்லிம்கள், முக்குகர்கள், மற்றும் சூத்திரர்கள் அனைவருமே சமூகத்தின் கீழ்நிலையில் இருக்க வேண்டு மென்பதற்காக பகிரங்கமாக கீழ்தரமான கருத்துகளை தெரிவித்தார் இவர். கிழக்கிலங்கை மக்களெல்லோரும் அரசியலுக்கு வந்தால் அதுவே கும்பலாட்சிக்கு வழிவகுக்கும் என்பதே அவரது வாதமாயிருந்தது. ஆனபோதும் வெள்ளையர்களது நிர்வாகம் இவ்விதவாதங்களை கவனத்தில் கொள்ளாது சர்வனவாக்குரிமை வழங்குவதை உறுதிசெய்தது. சர்வசனவாக்குரிமை விரைவில் வழங்கப்படப் போகுதென்ற எதிர்பார்ப்புகள் உறுதியானதும் இதனால் தமது தலைமைகளை காப்பாற்றி கொள்வதற்காக தமிழ்மக்களை ஏமாற்றி தம்வசம் இழுக்கும் சூது விளையாட்டுக்களில் ஈடுபடத்தயாராகினர் யாழ்ப்பாணத் தலைமைகள்.

எதிர்காலங்களில் தமது அரசியல் தலைமை களுக்கான இருப்புகளையும், அதிகார வாய்ப்பு களையும் உறுதிப்படுத்திக் கொள்வதாயின் பரந்துகிடந்த கிழக்கிலங்கை மக்களினதும், கீழ்தட்டு மக்களினதும் ஆதரவை பெறவேண்டிய நிலையை முன்னுணர்ந்தனர். இன ரீதியான பிரதிநித்துவ ஒதுக்கீடும், பரந்துபட்ட மக்கள் எல்லோருக்கும் விரைவில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட போகுதென்ற அறிவிப்புகளும் இந்த யாழ்பாண தலைமைகளை உலுப்பிவிட்டது. வயது வந்த எல்லோருக்கும் குறைந்தபட்ச அரசியல் உரிமையான வாக்களிக்கும் உரிமை வழங்கப் படுமானால் தம் அந்தஸ்துகளிற்கு ஆபத்தை கொண்டு வரலாம் என அவர்கள் அஞ்சினர். இவ்வித மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அடித்தள வாழ்வினை ஆதாரமாக கொண்ட கிழக்கிலங்கை பொது ஜனத்திரளின் செல்வாக்குகள் அரசியலில் முக்கியத்துவம் பெறபோகுதென்ற அவர்களின் எதிர்பார்ப்புகள் மிக விரைவாகவே நிகழ ஆரம்பித்தது.

அதேவேளை இனவாரி பிரதிநிதித்துவம் காரணமாக பாமர சிங்கள மக்களும், கராவ, சலாகம போன்ற கீழ்நிலை சாதியினர் என ஒதுக்கப்பட்ட பிரிவினரில் கல்வி கற்ற குழுவினரும் இலங்கை தேசிய காங்கிரசில் அதிகமாக சேர்ந்து செயற்பட ஆரம்பித்தனர். காங்கிரசினுள் ஆங்கில ஆதிக்கத்தை பகிரங்கமாகவே எதிர்த்த அவர்கள் சுதேச மொழி கொள்கைகளுடன் காங்கிரசை ஆக்கிரமித்தனர்.

சிங்கள மகாசனசபா எனும் இயக்கத்தை முழுமையாக இலங்கை தேசிய காங்கிரஸில் இணைத்த அவர்களது வரவு ஆங்கில தகமைகளுடன் காங்கிரசினுள் ஆதிக்கம் செலுத்திவந்த தலைமைகளுக்கு இக்கட்டான நிலைகளை ஏற்படுத்தியது. குறிப்பாக தமிழ் தலைமைகளுக்கு எதிர்காலம் குறித்து பாரிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருந்தது. நீண்டகாலமாக அரசியல் அதிகாரங்களை தம்வசம் வைத்திருந்த யாழ்ப்பாணத்தவர்கள் தொடர்ந்தும் தமது இருப்பைப் பேணுவதானால் சிங்கள உயர்தட்டு வர்க்கத்தினருடனான கூட்டை நம்பியிருப்பதில் பலன் ஏதும் இல்லையென்பதை புரிந்துகொண்டனர். இதன் காரணமாக இலங்கை தேசியகாங்கிரசை விடுத்து தமக்கான வேறு ஒரு அரசியல் துருப்புச் சீட்டை உருவாக்குவதற்கான வடக்கு கிழக்கு பொதுசனங்களை நோக்கிவர நிர்ப்பந்திக் கப்பட்டனர். அதுவரைகாலமும் தமது இனம் என்றோ, தமது பிரதேசம் என்றோ, ஏழைத் தொழிலாளர், தாழ்த்தப்பட்ட மக்களை ஏறெடுத்தும் பார்க்காதவர்கள் அதிலும் கிழக்கிலங்கையின் பக்கமே தம் பாதங்கள் பட்டறியாதவர்கள், தமிழின உணர்வு கொண்டவர்களாக தம்மைக்காட்டத் தலைப் பட்டனர். இதற்காகவே இலங்கைத் தமிழ் லீக் எனும் ஒரு அமைப்பை அவசர அவசரமாக உருவாக்கினர். இதுவே இலங்கைத் தமிழர்களின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அரசியல் இயக்கமாகும்.

இலங்கைத் தேசியகாங்கிரசில் தமிழருக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளுடன் 1921 இல் அந்த அமைப்பை விட்டு வெளியேறினார் சேர்.பொன்.அருணாசலம். 1923 இல் இலங்கைத் தமிழ் லீக் எனும் அமைப்பைத் தொடங்கிய கையோடு தமிழீழம் பெறுவதே அதனது குறிக்கோள் என கடுமையான பிரச்சாரத்தில் இறங்கினார்.

மக்களுக்கான தேவைகளும், விருப்பங்களும் கொண்ட ஓர் அரசியல் வேலைத்திட்டத்தை முன்வைத்து அரசியல் நடத்திப் பழக்கமற்ற இவர்கள் மக்களின் மனதில் இனவாதத் தைக்கிளறி அரசியல் பண்ணத் தொடங்கினர். வெள்ளைக்காறனுக்கு சாமரம் வீசி பெற்றுக்கொண்ட கல்வித் திறமையெனும் பூச்சாண்டியை வைத்து சிங்களவரிடத்தில் நடத்தி வந்த பிழைப்பை தொடரமுடியாமல் போன வேளையில் தமிழ் இனவாதத்தைத் தூவி பிழைப்பைத்தொடர துணிந்தனர்.

ஆங்கிலம் அரசோற்றிய கொழும்பு அரசியலை நோக்கி சிங்கள பாமர மக்களுக்கான சுயபாசைக் கோரிக்கை களுடன் உருவான சிங்கள மகாசனசபா போன்றவை அம்மக்களது பரந்துபட்ட சமூக பொருளாதார வாழ்வுகள் குறித்த திட்டங்களுடன் இலங்கைத் தேசிய காங்கிரசில் இணைவது என்பது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய நிகழ்வு. அதாவது மக்களது அபிலாசைகள் அரசியல் மயப்படுத்தப்படுவதற்கு முன்தள்ளுகின்ற ஒரு நடவடிக்கையாகவே இந்த இணைவுகளை கொள்ளுதல் வேண்டும். ஆனால் அப்படியானதொரு மாற்றத்திற்கு முகம்கொடுக்க முடியாத யாழ்ப்பாணத் தலைமைகள் அதனை சிங்கள இனவாதமாக திரிபுபடுத்திக் கூறினர். தமிழ் மக்கள் சார்பிலும் அப்படியொரு வேலைத் திட்டத்தை முன்வைக்க விருப்பின்றி வேறுவகையில் செயற்படத்துணிந்தனர். தமது தலைமை அந்தஸ்துக்களை தமிழர் தரப்பிலாவது காப்பாற்றிக் கொள்ளு தற்குரிய குறுக்குவழிகளை நாடினர். இதன்காரணமாகவே இலங்கைத் தேசியக் காங்கிரசில் இருந்து தமிழ்த் தலைமைகள் வெளியேறி, தமிழ் லீக் எனப்படும் இனவாத அரசியலின் தொடக்கப் புள்ளியை (யாழ்பாணத்தவர்கள்) தொடங்கி வைத்தனர்.

1923 இல் நடந்த இலங்கைத் தமிழ் லீக் கூட்டத்தில் தமிழீழம் என்ற நம் குறிக்கோளை அடைய வேண்டுமானால் எம்மிடையே ஒற்றுமையை வளர்ப்பதோடு, எமது கொள்கைகளை நாம் என்றும் கடைப்பிடிக்கவேண்டும். எமது பாரம்பரியத்தை நினைவு கூருவதோடு எமது தனித்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டுமானால் ஒரு பலமுள்ள சமூதாயமாக எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என சேர்.பொன்.அருணாசலம் முழங்கினார்.

தமிழர் ஒற்றுமைக்கோ, தமிழர் பாரம்பரியத் திற்கோ, தமிழர் தனித்துவத்துக்கோ அன்றைய நிலையில் (1920 களில்) சிங்களவர்களால் எந்தவித ஊறும் விளைவிக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக ஆங்கில மமதையில் ஆட்சி அதிகார பீடமாக உயர்ந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்தத் தலைமைகளே தமிழ் மக்களின் ஒற்றுமை குறித்து அக்கறைப் படாது இருந்தவர்கள். சொந்தமக்களின் உரிமைகளை மறுத்து சிங்கள அதிகார பீடத்துடன் அதிகாரத்தை பங்கிட்டுக் கொண்டிருந்தவர்கள். தமிழர் பாரம் பரியத்தை குழிதோண்டிப்புதைத்து தாய்மொழியை ஈனமொழியாக்கியவர்கள். அப்படியிருக்க அவர்களே இவற்றுக்காக அழுவது என்பது ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவதற்கு ஒப்பாய் இருந்தது.

இவ்விடத்தில் இருந்துதான் நாம் யாழ்ப்பாணத் தலைமைகள் உச் சரித்த தமிழீழக் கோரிக்கை என்கின்ற ஒரு விசித்திரமான அரசியலின் உருவாக்கம் ஏற்பட்ட காரணங்களை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். யாழ்ப் பாணத்து அரசியல்வாதிகளின் அப்பழுக்கற்ற சுயலாபம் கருதிய வெற்று அரசியல் சூதில் இருந்தே இந்தத் தமிழீழம் பிறந்தது என்பதுவே அது. ஆனால் இன்று தமிழீழம் என்கின்ற ஒரு கோரிக்கை நோக்கி தமிழ் மக்களை தள்ளிவிட்ட காரணங்களாக முன்வைக்கப்படுபவை கீழ்வருமாறு.

1) தனிச்சிங்களச் சட்டம் (1956)

2) கல்விதரப்படுத்தல் சட்டம் (1971)

3) தமிழ் மக்கள் மீதான இனக்கலவரங்கள் (1958.........)

4) சிங்கள குடியேற்றங்கள்.

மேற்படி காரணங்களே தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புவரை மீண்டும் மீண்டும் ஒப்புவிக்கப்படுபவையாகும். மிக இலகுவாக நோக்கும் இடத்து இக்காரணங்கள் எல்லாம் அப் பட்டமான பொய்யாகும் என்பது புலனாகின்றது. ஏனெனில் இவை யனைத்தும் நடந்தேறுவதற்கு முன்பே இந்த தமிழீழம் எனும் பிரச்சாரத்தை யாழ்ப்பாணத் தமிழன் தொடங்கி விட்டான். இக்கோரிக்கையினை பலப்படுத்தும் நோக்குடன் கிழக் குவாழ் மக்களையும் சேர்த்து ஏமாற்ற மேற்படி சம்பவங்கள் அவ்வப்போது துணைபுரிந்தன என்பதுதான் உண் மை. அதுவும் எவ்வளவுதூரம் அச்சம்பவங்கள் உண்மைநிலையில் இருந்து திரித்துக் கூறப்பட்டது?, உண்மையில் யார் நலங்களைப் பாதித்தது என்பதெல்லாம் கூட கூர்ந்து அவதானிக்கப்படக் கூடியதொன்று.

ஆகவே எந்தவொரு பாரிய அச்சுறுத் தலையும் தமிழ் சமூகம் எதிர் கொள்ளாத வேளையில் வெறும் யாழ்ப்பாணத்து மேல்தட்டினரின் நலங்களுக்கு பலம் சேர்ப்பதற்காகவே இந்த தமிழீழ கோரிக்கை 1923 இல் இருந்தே போலியானதாக எழுப்பப் பட்டி ருக்கிறது. இந்த எவ்விதத்திலும் அர்த்தபுஷ்டியற்ற ஒரு போலிப் பிரச் சாரத்தினூடு கிழக்கு மக்களையும் உள்வாங்கி □வாக்கு பொறுக்கி□ அரசியல் நடத்துவதற்காகவே இந்த தமிழீழத்தை முன்வைத்தனர் என் பதை இனியாவது தமிழர்களாகிய நாமும் கிழக்கு சமூகங்களும் புரிந்துகொள்ள வேண்டும். வெற்று இனவாதக் கூச்சலாகவும், விசமத் தனமானதொன்றாகவும் யாழ்ப்பாணத் தமிழனால் உருவாக்கப்பட்ட ஒரு நச்சுப்பிரச்சாரமே இந்த தமிழீழம் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

(தொடரும்.......)

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு முக்கியஸ்தர்களை இலக்கு வைக்க வந்த பிரபா குழு உறுப்பினர் துப்பாக்கியுடன் மடக்கிப் பிடிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு முக்கிய உறுப்பினர்களை கொலை செய்வதற்காக பிரபா குழுவின் தலைமைப் பீடத்தினால் அனுப்பப்பட்ட பிரபா குழுவின் புலனாய்வுத் துறை உறுப்பினர் துப்பாக்கியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் தலைமைச் செயலகமான மீனகத்தின் முக்கிய உறுப்பினர்களை படுகொலை செய்வதற்காக பிரபா குழுவின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த வேந்தனினால் திட்டம் வகுக்கப்பட்டு அத்திட்டத்தை செயற்படுத்த 18.08.06 இரண்டு பிரபா குழுவின் புலனாய்வுத் துறை உறுப்பினர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் வழமையாக பயணஞ் செய்யும் பாதையில் காத்திருக்கும் போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் சாதுரியத்தினால் பிரபா குழுவின் உறுப்பினர்களின் இலக்கு தவறியதுடன் அவர்களில் ஒருவர் துப்பாக்கியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

மடக்கிப் பிடிக்கப்பட்டவர் கதிரவன் என்ற இயக்கப் பெயருடைய புஷ்பராசா சுதன் எனவும் இவர் முன்னர் விஷாலன் படையணியில் இருந்தவர் என்பதுடன் தற்போது பிரபா குழுவின் புலனாய்வுத் துறை முக்கியஸ்தரான வேந்தனின் கீழ் விசாரணைப் பிரிவில் இயங்கியவர் என்பதுடன் இவரின் செந்த வதிவிடம் மட்டக்களப்பு திராய்மடு எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவரிடமிருந்து கைத் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிரதேச செயலகத்திற்கு அருகில் வைத்தே இவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். இவருடன் வந்த ரூபன் எனும் இன்னொரு பிரபா குழு உறுப்பினர் தப்பிச் சென்றுள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைக் கொலை செய்வதே இவர்களின் திட்டம் எனவும் இதற்காக இவர்கள் காத்து நின்றபோதே அன்று காலை 9:30 மணியளவில் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

(04ம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலைப் பகுதியில் தாக்குதல் மேற்கொண்ட பிரபா குழுவினரை இராணுவம் மிகத் தந்திரமாக பளை, இயக்கச்சிப் பகுதிவரை உள்ளேவிட்டு பலமாகத் தாக்கியது. சிறிதளவான எதிர்ப்பை எதிர்கொண்டு முன்னேறிய பிரபா குழு தம்மீது பலமான அடிவிழுமென கற்பனையில்கூட நினைக்கவில்லை. படையினரின் திடீர்த் தாக்குதலினால் நிலைகுலைந்துபோன பிரபா குழுவினர் தமது 81 உறுப்பினர்களின் சடலங்களையும் விட்டுவிட்டு ஓடினர்.

மறுமுனையில் மண்டைத்தீவு, ஊர்காவற்துறைப் பகுதியில் பலநூறு பிரபா குழுவினர் கடல்வழியாகத் தரையிறங்க அந் நடுநிசி நேரத்திலும் எதிர்பார்த்துக் காத்திருந்தது போல இராணுவமும், கடற்படையும் தாக்க விமானப்படையின் உதவியும் கிடைத்ததால் பிரபா குழுவின் நிலைமை சொல்லொண்ணாச் சோகமானது. பலத்த இழப்புகளுக்கு மத்தியிலும் பல முனைகளில் பல தடவைகள் யாழ் குடாநாட்டை முற்றுகையிட பிரபா குழு முயன்றபோதும் முடியவில்லை. சுமார் 350 பிரபா குழுவினர் இம் மோதலில் உயிரிழந்தனர். மட்டுமன்றி 200ற்கும் மேற்பட்ட பிரபா குழுவினர் படுகாயமடைந்த நிலையில் உரிய மருத்துவ வசதியில்லாமல் பலர் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இம் மோதல் காரணமாக பிரபா குழுவின் ஆளனிப் பலம் வெகுவாகக் குறைந்துள்ளதோடு உளரீதியான பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இப்போதுதான் பிரபாகரனுக்கும் பொட்டனுக்கும் தெரிந்திருக்கும் கருணா அம்மான் என்ற பெரும் யுத்த தந்திர நிபுணரின் வழிகாட்டலும், கிழக்குப் போராளிகளின் அர்ப்பணிப்புடனான வீரமும். பூநகரியில் இருந்து ஆனையிறவு, ஜெயசிகுறுவரை பலம்பொருந்திய பெரும் படையை விரட்டியடித்த அவ்வீரப் புருஷர்கள் இல்லாததனால் துடுப்பில்லாத தோணிமாதிரி ஆகிவிட்டது பிரபா குழு.


ஒரு பிரபல இராணுவ ஆய்வாளர் தெரிவித்ததைப் போல கருணா அம்மானின் பிரிவினால் பிரபா குழுவினால் எப்பெரும் மரபுவழிச் சமரில் ஈடுபடமுடியாது என்பது இப்போது நிருபணமாகியுள்ளது. இதுவரை இடம்பெற்ற மூன்றுகட்ட ஈழப்போர்களும், ஒவ்வொருகட்ட சமாதான முயற்சியின் முடிவாகத்தான் இருந்தது. தமது தேவைகள் நிறைவேறியவுடன் ஆயுதங்களை இறக்குமதி செய்து முடிந்தவுடனும் சிறுசிறு விடயங்களைப் பெரிதாக்கி யுத்தத்தை ஆரம்பித்த பிரபாகரனால் இவ் ஐந்துவருட காலத்தின் தோல்விகளுக்கு காரணம் தேடிக்கொண்டு பொறுமையின் எல்லையில் இருப்பதாகக் கூறுவதன் மர்மம் கருணா என்ற மூன்றெழுத்துச் சொல் மந்திரம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலையின் முதல் நிபந்தனை புலிப் பாசிசத்தின் தோல்வியாகும்.

கண்ணதாசன்



இலங்கையிலே மீண்டும யுத்தம்.

ஆனால் இம்முறை யுத்தம் இவ்வளவுகாலத்தில் தொடங்கிய யுத்தத்திலும் குணாம்சத்தில் மிக வித்தியாசமானது. 2002 சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு புலி ஆயிரக் கணக்கான ஆத்தி மூட்டல்களைச் செய்தபோதும் அரசாங்க அமைச்சர்களை ஆயுதப் படைகளின் உயர் அதிகாரி களைத் தென்னிலங்கையில் வைத்துத் தற்கொலைக் குண்டால் கொன்றபோதும், கெப்பிட்டிபொலையில் பஸ்சில் குண்டுவைத்து அனேக குழந்தைகள் கொல்லப்பட்ட போதும் ஏற்படாத யுத்தம் இப்பொழுது ஏற்பட்டது.

புலி மாவிலாறு விவசாய நீர்ப்பாசன வாய்க்கால் துரிசை அடைத்து விவசாயிகளை ஆத்திரமூட்டியது, அரசியலைப் பொறுத்தவரை ஆபத்தானது. சிலபடிப்பனவுகளை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும். 1800 களில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆக்கிரமித்தபொழுது அன்றைய தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளின் அணைக் கட்டுகளை உடைத்து விவசாயிகளைப் பட்டினி போட்டே இந்தியர்களை அடக்கியது. இலங்கையில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் அணைக்கட்டுகளைப் பராமரிப்பதைத் தடைசெய்து அழிய விட்டே இலங்கையை அடக்கி ஆண்டது. பிரெஞ்சுக்காரர்கள் அல்ஜீரியாவை ஆக்கிரமித்த பொழுது அல்ஜீரியர்களின் பொதுவிவசாயநிலங்களைப் பாழ்படுத்தி அந்த மக்களைப பட்டினி போட்டே அவர்களை அடிமைப்படுத்தியது என்று றோசா லுக்கசம்பேர்க் தனது மூல தனத்தின் திரட்சி என்ற புத்தகத்தில் விபரிக்கின்றார்.

உலகில் தோன்றிய அத்தனை புரட்சிகளும் விவசாயப் புரட்சிகளாகத் தொடங்கி அவை ஜனாயகப் புரட்சி களாகவோ சோ'லிசப்புரட்சிகளாகவோ வளர்ச்சியடைந்தன. உலகில் நடந்து முடிந்த எல்லாப் புரட்சிகளையும் ஐயந்திரிபறக் கற்றுக்கொண்ட லெனின் ஓர் உண்மையை உரத்துக் கூறினார். இந்நாடுகளின் புரட்சிப் போராட்டங் களின்போது விவசாயிகளின் உரிமைக் காகப் போராடுவதன்மூலமே இத்தேசி யங்கள் கொடிபற்றின. பின் நாளில் தேசிய இனப் பிரச்சனைகள் பற்றி எழுதிய லெனின் தேசியவிடுதலை விரும்பிகள் விவசாயிகளின் உரிமைக் காகப் போராடுவதன் மூலமே பலம்பெற முடியும் என்றும் தேசிய இன உருவாக்கத்தைக் கெட்டியாக்க முடியும் என்பதையும் வலியுறுத்தினார்.

இதற்கமைய 1983 இல் தமிழீழத் தேசிய எழுச்சி உக்கிரமடைந்த பொழுது கீழக்கு மாகாணத்திலுள்ள போடிமார் களின் பெருநிலங்களைப் பறித்து நிலமற்ற தமிழ் முஸ்லீம் விவசாயி களுக்குப் பகிர்ந்து அளிக்கும் படி கேட்கப்பட்டது. நல்லது நாய்கிறங்காது என்பது போல புலி அதை அறவே மறுதலித்தது. இதைச் செய்வதன்மூலம் தமிழ் தேசியத்தைக் கெட்டியாக்குவது மாத்திரமல்ல இது அம்பாறையில் உள்ள நிலமற்ற சிங்கள விவசாயிகளை எழுச்சி கொள்ள வைத்திருக்கும். மேலும் நாடுதழுவிய நிலமற்ற வறிய விவசா யிகளை எழுச்சி கொள்ள வைத்திருக்கும். தமிழீழப் போராட்டம் ஒரு பிற்போக்கிற்கு வழிதிறவாது என்பதை அது உறுதி செய்திருக்கும். இன்றோ புலி மாவிலாறு விவசாயிகளை ஒடுக்கியதன் மூலம் தமிழ் தேசியத்தைப் பலவீனமாக்கியது.

மாவிலாறு பிரச்சினையில் ஏன் அரசாங்கம் இவ்வாறு தலையிட்டது. மாவிலாறு விவசாயிகள் பிரச்சினை தென்னிலங் கையின் மற்றய விவசாயிகளை உசுப்பி விட்டிருக்கும். அதுமாத்திரமல்ல இந்திய உபகண்டம் முழுவதும் எண்பது சதவீதமானவர்கள் விவசாயிகள் ஆகும். இலங்கை விவசாயிகளுக்குச் சாதகமாகக் கட்டாயம் குரல் கொடுத்திருப்பர். அல்லது எழுச்சி கொண்டிருப்பர். கண்டந்தழுவிய எழுச்சியாக அது பரிணமித்து ஈற்றில் கண்டந்தழுவிய புரட்சியாக அது வளர்ச்சி கொண்டிருக்கும். இதுதான் இலங்கை அரசை யுத்தத்திற்குப் போகும்படி சர்வதேச இராஜதந்திரிகள் உந்திய காரணமாகும்.

அரசாங்கம் செய்யும் கொடுமைகளை விழித்த கண்ணால் பார்க்கும் படியும் புலிப்பாசிசம் செய்யும் தமிழர் கொலை களைப் பார்க்காது இருப்பதற்காக மற்றக் கண்ணால் தூங்கும்படியும் கட்டளை போட்டுள்ளார். புலியின் சவுக்கு பளாரென்று எமது முதுகில் விழும்பொழுது தேசாபிமானத்தால் மனம் புண்ணா கின்றோம். உண்மையைவிட பாசிச சர்வாதிகாரத்தின் அத்தனை பொய் களையும் புழுகுகளையும் மேலானதென்று மதிக்கும் பழக்கத்திற்கு அடிமையா கிவிட்டோம்.

தமிழ் மக்களின் விடுதலையின் முதல் நிபந்தனை புலிப்பாசிசம் தோற்கடிக் கப்பட்டு இந்தக் கொலைவெறியர்கள் நிராயுதபாணியாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதாகும். மற்றய எந்த அரசியலும் தமிழர்களைப் பொறுத்தவரை ஏமாற்றும் வஞ்சகமும் ஆகும். புலிப்பாசி சத்தைப் பொறுத்தவரை தமிழர்கள் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் உள்ளவர்கள் மட்டுமல்ல வெளிநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களும் untermenschen suhuman கீழ்சாதிகள். புலி ஒடுக்குமுறைக்கு முன்னால் தமிழ் மக்கள் அத்தனைபேரும் அனாதரவானவர்கள்.

புலியென்ற நரகலோகஜந்திரம் பிரமாண்டமான ஒடுக்குமுறைச் சக்தியைப் பெற்று பொருந்தொகையான தமிழர் கொலைகளைத் திமிரோடும் தன்னம்பிக் கையோடும் செய்துவருகிறது. புலியால் எந்தத் தமிழனையும் விடிந்து பொழுது படுவதற்குள் துரோகி ஆக்க முடியும். புலிப்பாசிசத்தை எதிர்க்கும் எவரையும் அரச ஒட்டுப்படையென்றோ சிங்கள வனுக்குப் பிறந்ததென்றோ முத்திரை குத்தமுடியம். புலியின் கொலைவெறியும் கொடுமை சித்திரவதை செய்யும் வெறியும் வரலாறு கண்டுகேட்டிராத அளவுக்கு வளர்ந்துள்ளது. தமிழர்களுக்கு எதிரான அரசியற் பயங்கரவாதமும் தமிழர்களின் மேல் செய்யும் சித்திரவதைகளையும் கேட்டு சிங்கள அரசபடைகளே இரக்கங் கொள்ளுமளவுக்குப் பிரமாண்டமானது. புலி ஆயிரக்கணக்கான கூலி உளவாழிகளைப் படைத்து தமிழர்களை வாய்திறக்கவிடாமற் செய்துள்ளது. படித்தவர்கள் நேர்மையானவர்கள், நல்லவர்கள், மூலதர்மம் உடையவர்கள் எல்லோரையும் கொன்று குவித்து விட்டு அயோக்கியர்கள், ஊதாரிகள், பொய்யர்கள் ,போக்கிரிகள், கொலைகாரர்கள், படிப்பறிவற்றவர்களை அரசகதிரைகளில் இருத்தியுள்ளது.

தமிழீழப் போராட்டமென்றபேரில் எந்தவிதமான படிப்பறிவுமற்ற ஓர் ஒட்டுண்ணிக் காட்டுமிராண்டிக் கூட்டம் அறிவியலாளர்களின் அரசியற்பிரதி நிதித்துவங்களை அபகரித்துவிட்டது. தாம் எவ்வளவு தமிழர்களைக் கொன்று குவித்தாலும் ஆரும் தட்டிக்கேட்க வரமாட்டாகள் என்று பிரபாகரனும் பொட்டம்மானும் யோசிக்கிறார்கள். யுத்தம் எப்பொழுதும் இனவாதிகளையும் அரசியல் ஊசலாட்டப் பேர்வழிகளையும் அம்பலப் படுத்தும். போலிப் புலி எதிர்ப்புவாதிகளின் முகத்திரையைக் கிழித்து விசுவாசமாக ஜனனாயகத்திற்காகப் போராடுபர்களை விழிப்படைய வைக்கும். தொன்கணக்கில் புலிவிரோதம் பேசியவர்கள் எல்லாம் புலி தோற்கவேண்டும் என்ற நிலைப்பட்டை எடுக்கும் திராணி அற்றவர்களாக மாறியது மாத்திரமல்ல பிரச்சினையை வரலாற்று நோக்கிலும் பலபக்கச்சார்புகளோடும் பார்க்காமல் வள்ளிபுனம் ஆகாயப்படைக் குண்டுவீச்சு பற்றிய புலிப் பொய் செய்திகளை எந்தவித விமர்சன நோக்கோடு பகுத்தாய்வு செய்யாது புலிப்பிரச்சாரத்தைச் சொல்லும் கிளிப் பிள்ளை வே'ம் போட்டு காலங்கடந்து அரைப்புலி காப்புலியாக ஞானஸ்தானம் எடுத்துள்ளனர். எல்லாக் கொலையையும் தாம் எதிர்ப்பவர்கள் என்று பிதற்றும் ஒரு கூட்டம் பாசிசவாதிகளையோ பசிலஸ் கிருமிகளையோ எயிட்ஸ்ட் கிருமிகளையோ கொல்லக் கூடாது என்றமட்டத்திற்கு ஜீவகாருணியவாதிகள் ஆகிவிட்டனர். புலி இன்றுவரை இவர்களைப் போன்றவர்களால்தான் தப்பிப் பிழைத்தது.

முதலாளித்துவ இலங்கை அரசாங்கத் திற்கும் புலிப்பாசிசத்திற் குமிடையே ஏற்பட்டுள்ள இந்த யுத்தத்தில் புலிப்பாசிசத்தைத் தோற்கடிக்கும் பக்கம் தமிழர் அரசியல் செல்லக்கூடாதென்று சொல்லி தமிழ் மக்களை அரசியல் வியாகூலப் படுத்துகிறார்கள். ஒரு முதலாளித்துவ அரசாங்கம் இனவாதமாக இருப்பது சகஜமே. அல்லாவிடில் அது முதலாளித்துவ அரசாங்கமாக இருக்காது. தென்னி லங்கையிலே எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. பத்திரிகைச் சுதந்திரம் இருக்கின்றது. ஜனனாயகம் முற்றாகத் தோற்கடிக்கப் படவில்லை. நாலுலட்சம் தமிழர்கள் கொழும்பில மாத்திரம் வாழ்கின்றார்கள்.

தமிழர் வாழும் பிரதேசத்தில் புலிப்பாசிசத்தின் குதிகாலின்கீழ் மிச்சசொச்சமே இல்லாமல் ஜனனாயகம் நசுக்கப்பட்டிருக்கையில் புலிப்பாசிசம் தோற்பதால் தமிழர்களுக்கு ஒரு நட்டமும் வரப் போவதில்லை. புலியின் தோல்வியே தமிழர் விடுதலையில் முதல் நிபந்தனையாகும். தமிழர்களின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஆயிரமாவது எதிரி எல்லாமே புலிதான். இதை நாம் புலிப்போபியாவாற் சொல்லவில்லை. புலியைத் திருத்த இயலாது. அதேபோலவே தென்னிலங்கை இனவாத ஊழல் நிறைந்த அரசாங்கத்தையும் திருத்த முடியாது. கொழும்பு அரசாங்கம் தமிழர்களுக்கு ஆனைதருவேன் சேனைதருவேன் என்று சொல்வதை ஒருபொழுதும் நாம் நம்பப் போவதில்லை. பொருளாதாரக் கட்டுமானத்தை விஞ்சிய எந்த உரிமையும் இருக்கப் போவதில்லை. There is no rights beyond the economic structur.-Marx-

புலிப்பாசிசத்தின் இராணுவ மற்றும் அரசியற் தோல்வியானது தமிழ் இனவா தத்தின் தோல்வியாகும். தமிழ் இனவாதம் இல்லாவிடில் சிங்கள இனவாதம் ஊட்டம்பெறாதது மாத்திரமல்ல அது தோற்கடிக்கப் படுவதும் நிர்ணயமாகும். புலிப்பாசிசத்தின் தோல்வியின் பின் தென்னிலங்கையில் கட்சிகள், இனவாத அரசாங்கங்கள் ஒருவருடம் கூட நீடிப்பது அசாத்தியமே.



புலிப்பாசிசத்தின் தோல் வியின் முதலாவது வருடாந்த விழாவைக் கொண்டாடுவதற்கு முன்னரே இலங்கையில் அரசியல் அற்புதங்கள் நிகழும். புலியின் தோல்வியோடு இலங்கை அரசியல்வானில் புதிய போராட்டங்கள் உக்கிரம் அடையும்.

முன்பு உலக ஏகாதிபத்தியங்களின் தரகனான நோர்வே இந்த யுத்தத்தில் யாரும் வெல்ல முடியாது என்று சொல் லியது. புலியின் அத்தனை கொலை களையும் பாராமுகமாக இருந்தது. இன்றுபுலி தோற்கும் பொழுது மக்கள் சாகிறார்கள். போரை நிறுத்தும்படி கூறுகிறது. இப்படித்தான் முதலாம்யுத் தத்தின்போது தோல்வியுமில்லாத வெற்றியுமில்லாத சமாதானம் வேண்டு மென்றார்கள். அவமானம் இல்லாத சரணாகதியும் இல்லாத சமாதானம் வேண்டுமென்றார்கள். இந்த யுத்தத்திலே புலி வெல்லுதோ தோற்குதோ தமிழர்கள் எப்பொழுதோ தோற்று விட்டார்கள்.

ஆனாலும் இன்னுமொரு சின்ன நம்பிக்கை துளிர்த்து வருகின்றது. தமிழ் மக்கள் தம் விடுதலையை முதலில் யரிடமிருந்து பெறவேண்டும் என்பதை சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். பாசிசத்தினால் அடக்கப்பட்ட தமிழ் மக்களின், போராளிகளின் உரிமையைக் கேட்டு அப் பாசிசக் கூடாரத்தில் இருந்து ஒரு புரட்சி வெடித்து தமிழ் மக்கள் விடுதலைப் புலியாக அது இன்று கிழக்கு மண்ணில் வேரூன்றி வளர்கின்றது. இப்புரட்சி முழுத் தமிழ் இனத்தையும் ஆட்கொள்ளும்போது புலிப் பாசிசம் தன் முகவரி தேடும் அந்தநாள் வெகுதொலைவில் இல்லை.

ஆக புலிப் பாசிசத்தின் தமிழ் இனவாதத்தைத் தோற்கடித்து அடக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரல் உரக்கும்போது அது தெற்கிலுள்ள அடக்கப்பட்ட மக்களையும் சென்றடையும். அந்நாள் தமிழ், சிங்கள இனவாதம் தோற்கடிக் கப்பட்ட சுதந்திரமான இலங்கையின் சுதந்திர தினமாக இருக்கும். ●

## இலங்கை விமானப்படைக்கு மேலும் 5 கிபீர் ரக விமானங்கள்



இலங்கை விமானப்படைக்கு மேலும் 5 கிபீர் விமானங்கள் கிடைக்கப்பெறவுள்ளன. இலங்கை யுத்த வரலாற்றில் பெரும் பங்காற்றியுள்ள கிபீர் ரக விமானங்கள் 1995ம் ஆண்டு விமானப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டன. 2000ம் ஆண்டு கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலின் போது சில கிபீர் விமானங்கள் சேதமடைந்தன. இஸ்ரேலியத் தயாரிப்பான கிபீர் விமானங்கள் இலங்கை உட்பட உலகில் நான்கு நாடுகளிலேயே பாவனையில் உள்ளன. தற்போது வட-கிழக்கில் இடம்பெற்று வரும் மோதலில் பிரபா குழுவுக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியுள்ள கிபீர் விமானங்கள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளதானது பிரபா குழுவின் வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயமாகும். தற்போது இணைத்துக்கொள்ளப்படவுள்ள கிபீர் விமானங்கள் ஏற்கனவே இலங்கையில் பாவனையிலுள்ள கிபீர் ரக விமானங்களை விட தரத்திலும், தொழினுட்பத்திலும் மேம்பட்டவை எனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு மோதலில் வென்றது யார்?

தொடர்03

எழுதுவது உத்தமன்



மத்திய கிழக்கின் நான்காம் கட்டப் போர் என ஆய்வாளர்களினால் வர்ணிக்கப்பட்ட இஸ்ரேல், ஹிஸ்புல்லா யுத்தம் ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தைத் தொடர்ந்து முடிவுக்கு வந்துள்ளது. லெபனானின் தென் பகுதியைப் பராமரிக்க வலுப்படுத்தப்பட்ட ஐ.நா சமாதானப் படை விரைவில் அங்கு நிலைகொள்ளவுள்ளது.

மத்திய கிழக்கு வல்லரசு என வர்ணிக்கப் படும் இஸ்ரேலினால் ஹிஸ்புல்லாப் போராளிகளை ஒடுக்கவென லெபனான் மீது மேற்கொண்ட யுத்தத்தின் முடிவென்ன? இம் முடிவு புதிய உலக ஒழுங்கில் (new world order) மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்கின்றனர் இராணுவ வல்லுனர்களும், அரசியல் ஆய்வாளர்களும். பெரும் இராணுவ வல்லமை கொண்ட சியோனிசியப்படை ஹிஸ்புல்லாக்கள் தோற்கடித்து மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற வெற்றியைப் அடைந்துள்ளதாகக் கூறுகின்றனர் சிரிய நாட்டின் அதிபர் பசீர் அல்சாத்தும், ஈரானின் ஜனாதிபதி அஹமட் அல் நெஜாத்தும்.

இக் கருத்தையே அரசியல் ஆய்வாளர் களும், இராணுவ வல்லுனர்களும் கொண்டுள்ளனர். இஸ்ரேல் மக்கள் கூட இஸ்ரேல் ஹிஸ்புல்லாக்களிடம் தோற்று விட்டதாக கருதுகின்றனர் என்கின்றார். மத்திய கிழக்கிற்கான பி.பி.சி. அரசியல் ஆய்வாளர். இஸ்ரேலின் அதிகம் விற்பனை யாகும் தினசரிப் பத்திரிகை ஒன்று நடாத்திய கருத்துக் கணிப்பில் இஸ்ரேலின் தோல் விக்குப் பொறுப்பேற்று இஸ்ரேலியப் பிரதமர் எருட் எல்மர்ட் பதவி விலக வேண்டுமென 68 வீதமான மக்களும், இராணுவத்தைத் தவறாக வழிநடாத்தி யமைக்காக பாதுகாப்பு அமைச்சரும், இராணுவத் தளபதியும் பதவி விலக வேண்டுமென 81 வீத மக்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். இஸ்ரேலின் யுத்தம் இஸ்ரேலின் அரசியலில் மாபெரும் பூகம்பத்தை ஏற்படுத்தப் போகின்றது.

உலகில் மிக வலுவான இராணுவத்தை யுடைய, அதி நவீன தொழிநுட்பத்தை உடைய இஸ்ரேல் தனது 45,000 படையி னரையும் 1500 விஷேட கொமாண்டோக் களையும் தென் லெபனானில் இறக்கியும் எவ்16, எவ்32, பி52 போன்ற அதிநவீன யுத்த விமானங்களைப் பயன்படுத்தியும் மினி அணுகுண்டு எனக் கூறப்படும் பங்கர் பாஸ்டர் குண்டுகளையும், பொஸ்பரஸ் குண்டுகளை ஆயிரக் கணக்கில் வீசியும், பி.எல்.யு113, பி61, ஜீபியு28 போன்ற பாரிய ஏவுகணைகளை ஏவியும் இஸ்ரேலினால் ஹிஸ்புல்லாப் போராளிகளை அழிக்கவோ, அவர்களினால் கடத்தப்பட்ட இரு வீரர் களை மீட்கவோ முடியவில்லை.

இஸ்ரேலின் இவ்விராணுவப் பின்னடை வானது அதன் ஆயுத சந்தையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளளது மட்டுமல் லாமல் உலக வல்லரசு அமெரிக்காவின் ஆயுத ஏற்றுமதியிலும் தாக்கம் செலுத்தலாம். ஏனெனில் இஸ்ரேலின் அனைத்து தொழிநுட் பங்களின் பிறப்பிடம் அமெரிக்காதான்.

இஸ்ரேல், ஹிஸ்புல்லா மோதலில் 1000ற்கும் மேற்பட்ட லெபனான் மக்கள் உயிரிழந்தனர். இவர்களில் 27பேர் மட்டுமே ஹிஸ்புல்லாப் போராளிகள். ஏனையோர் அனைவரும் பொதுமக்கள். இஸ்ரேலினால் அழிக்கப்பட்ட லெபனானின் உட்கட்டமைப்பு வசதிகளைப் புனர் நிர்மானம் செய்ய 13700 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் என்கின்றார் லெபனான் அபிவிருத்தி அமைச்சர். இஸ்ரேலின் தாக்குதலினால் லெபனானின் துறைமுகம், விமான நிலையம் என்பன நிர்மூலமாக்கப்பட்டுள்ளதுடன் அதன் அபி விருத்தியை 30 வருடங்கள் பின்நோக்கி நகர்த்தியுள்ளது. ஹிஸ்புல்லாக்களின் பதில்த் தாக்குதலில் 120 இஸ்ரேலிய வீரர்கள் உட்பட 182 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மட்டுமன்றி ஹிஸ்புல்லாக்களின் ரொக்கட் தாக்குதலினால் வட இஸ்ரேலே ஸ்தம்பித்துப் போனது. பாடசாலைகள், அலவலகங்கள் எதுவுமே இயங்காமல் வடபகுதி இஸ்ரேல் மக்கள் 30 நாட்களாக பதுங்கு குழி அறைகளிலேயே தம் நாட்களை நகர்த்தினர்.

இவை மட்டுமன்றி அரபுலகில் புதிய நாயகர்களாக ஹிஸ்புல்லாக்கள் இவ் யுத்தத்தின் மூலம் தோற்றம் பெற்றுள்ளனர். இது மத்திய கிழக்கில் அமெரிக்க நலனுக்கும், அமெரிக்க சார்பு ஆட்சியாளர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாய் அமையும். இதனைவிட இஸ்லாமிய உலகில் காணப்படும் சன்னி, சியா என்ற வேறுபாட்டைக் கடந்து அனைத்து அரபுக்களும் ஹிஸ்புல்லாக்களை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளனர். இது அரபுலகில் தற்காலிக பிரிவுகளை பின்தள்ளி அமெரிக்க இஸ்ரேலிய எதிர்ப்புப் போக்கை மேலும் பலமடையச் செய்யும். இதற்கு எதிராகவுள்ள அரபு நாட்டின் ஆட்சியாளர்களுக்கு எதிராக கிழர்ச்சி வெடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இது அமெரிக்கா தனது தலைமையில் ஏற்படுத்த முனையும் புதிய உலக ஒழுங்கில் (new world order) தாக்கம் செலுத்தும் என்கின்றனர் ஆய்வாளர்கள். எவ்வாறெனில் ஒரு சிறியப் போராளி கொரில்லா இயக்கம் அமெரிக் காவின் ஏகோபித்த ஆதரவு பெற்ற இராணுவ வல்லமையுடைய ஒரு நாட்டை திணறடித்தி ருப்பதானது அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை யுடைய பல நாடுகளுக்கு உத்வேகத்தை அளிக்கும். ஏற்கனவே தென் அமெரிக்காவில் பலம் பெற்றுவரும் இடதுசாரிகளின் அணியும் மேலும் பலமடையலாம்.

இது மட்டுமன்றி இஸரேலுக்குள் ஹிஸ்புல்லாக்கள் ஏவிய ரொக்கட்டுக்கள் இஸ்ரேலிய ராடர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு நீண்டதூரம் சென்று வீழ்ந்து வெடித்துள்ளன. இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாட்டினால் லெபனான் மீதான இராணுவ நடவடிக்கைக்கு முன் அளிக்கப்பட்ட அறிக்கையில் ஹிஸ்புல்லாக்களிடம் 20-30 கிலோமீற்றர் தூரம் செல்லக்கூடிய ரொக்கட் டுக்கள் உள்ளதாகவே கூறப்பட்டது. ஆனால் யுத்தம் ஆரம்பமானபோது ஹிஸ்புல்லாக்கள் ஏவிய ரொக்கட்டுக்கள் இஸ்ரேலுக்குள் 70-80 கிலோமீற்றர் தூரம் வரை சென்று வீழ்ந்து வெடித்தன.

ஹிஸ்புல்லாக்களுக்கு இவ்வாயுதங்களை வழங்குவது ஈரானும், சிரியாவும் என அமெரிக்காவும், இஸ்ரேலும் குற்றஞ்சாட்டு கின்றன. இது உண்மையென்றால் நிச்சயமாக இதனைவிட சக்திவாய்ந்த மத்திய கிழக்கில் இஸ்ரேலையும், அமெரிக்க நிலைகளையும் தகர்க்கக் கூடிய ஆயுதங்கள் உள்ளன என்பதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது.

இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் தொடுத்தமை ஹிஸ்புல்லாக்களை அழிப்பது மட்டுமன்றி அமெரிக்காவினது மாபெரும் தேவை ஒன்றைப் பூர்த்தி செய்யும் முகமாகவே அமைந்தது. அரபு நாடுகளுடன் நண்பர் வேடம் போடுவதனால் அமெரிக்காவினால் இதனை நேரடியாகச் செய்ய முடியாது என்பதினால் தனது செல்லப்பிள்ளை மூலம் காரிமாற்ற ஒழுங்கு செய்யப்பட்டதுதான் லெபனான் யுத்தம். லெபனான் மீதான இஸ்ரேலின் பிரதான இலக்காக இருந்தது தென் லெபனானை இராணுமயப் படுத்துவதாகும். (militar ization) இதனைத்தான் இஸரேலிப் பிரதமர் தாக்குதால் ஆரம்பமாவதற்கு முன் லெபனான் மீதான தாக்குதல் ஒழுங்கு ஒரு நீண்டகால யுத்தம் என மறைமுகமாகக் கூறியிருந்தார்.

இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்த சமயம் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் கொண்டலீசா ரைஸ் இப்பிராந்தியத்திற்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அப்போது பிரித்தானியாவின் டெய்லி டெலிகிராப் பத்திரிகை பின்வருமாறு எழுதியது. இப்பிராந்தியத்திற்கான ரைஸின் விஜயம் அங்கு அமைதியையோ, சமாதானத் தையோ ஏற்படுத்த அல்ல சிரியா, ஈரான், லெபனான் போன்ற நாடுகளை இராணுவமயப் படுத்தி தனிமைப்படுத்துவதே இவரின் விஜயத்தின் நோக்கம்.

இவ்வாறான திடீர்த் தாக்குதலினதும் இந் நாடுகளை இராணுவமயப் படுத்துவதினதும் அவசியம் என்ன?

கடந்த ஜூலை மாதம் துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் ரகசிய மாநாடு ஒன்று நடை பெற்றது. துருக்கி ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பிரிட்டன், அமெரிக்கா, இஸ்ரேல், பிரான்ஸ், நோர்வே ஆகிய நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள் பங்குபற்றினர். இம்மாநாட்டின் நோக்கம் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கின்ற ceyhan tbilise baku pipline பற்றியதாகும். துருக்கியத் துறைமுகமான ceyhan வழியாக ஜோர்ஜியாவின் தலைநகர் tbilise கடந்து அஸர் பைக்கான் நகர் baku வை சென்றடையக் கூடிய புதிய குழாய் எண்ணெய்த் திட்டம் பற்றியதாகும். சுமார் 1760 கிலோமீற்றர் நீளத்தில் அமையும் குழாய் எண்ணெய்த் திட்டத்தில் இப்பிராந்திய நாடுகளின் எண்ணெய் வளங்கள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல், நோர்வே போன்ற மேற்கத்தேய நாடுகளினால் சுரண்டப்படவுள்ளது. இத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டால் வருடாந்தம் 1.5 மில்லியம் பரல் எண்ணெய்யை இந் நாடுகள் பெறமுடியும். இத்திட்டத்திற்கு பிரிட்டன் பெற்றோலியக் கம்பனி (BPC) 30 வீதம், அமெரிக்கப் பெற்றோல் நிறுவனம் 8.9 வீதம், அஸர்வைக்கானின் 25 வீதம், அமெரிக்கப் பெற்றோலியக் கம்பனி 3 வீதம், நோர்வேயில் 8 வீதம், இஸ்ரேல் 7.6 வீதம், பிரான்ஸ் 2.8 வீதம் இத்தாலி 7.9 வீதம் முதலீடு செய்கின்றன. இத்திட்டத்தில் இஸ்ரேல் தனக்குத் தேவையான எண்ணை வளத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் துருக்கியின்



சிகான் துறைமுகத்தில் இருந்து இஸ்ரேலின் துறைமுக நகரமான அஸ்கெரில்லாவுக்கு நேரடிக் குழாய் வழியில் பாதை அமைக்கப்பட வேண்டும். இங்குதான் இஸ்ரேலுக்கு மாபெரும் தடை உள்ளது.

துருக்கியின் துறைமுக நகரிலிருந்து இஸ்ரேலுக்கான 400 கிலோமீற்றர் பயணப் பாதையில் இவ்வெண்ணெய்க் குழாய் லெபனான், சிரியா ஆகிய நாடுகளின் கரையோரத்தை அண்டியதாகவே வரவேண்டும். இக் கடற்பிராந்தியத்தை பொறுத்தவரை இஸ்ரேல் அமெரிக்காவுக்கு எதிரான சக்தியின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது. 1990ம் ஆண்டு வளைகுடாப் போருக்குப் பின் அமெரிக்காவினால் மத்திய கிழக்கில் நிர்மாணிக்கப்பட்ட 14 கடற்படைத் தளங்கள் ஒன்றுகூட இங்கு இல்லை எனவே இப்பிராந்தியக் கடற்கரைப் பகுதியினூடாக இஸ்ரேலின் எண்ணெய்க் குழாய்ப் பாதை பாதுகாப்பாக வருவதுடன், அமெரிக்காவின் இரண்டு கடற்படைத் தளங்களும் இங்கு அமைக்கப்படவேண்டும் இதுதான் அமெரிக் காவினதும், இஸ்ரேலினதும் திட்டம்.

எனவே இத்திட்டம் நிறைவேறுவதற்கு இப்பிராந்தியத்திலுள்ள தமது எதிரிகளை விரட்டிவிட்டு இராணுவமயப் பிராந்தியமொன்றை அமைக்கவேண்டும். இதற்கு முதல் இலக்கு ஹிஸ்புல்லா அடுத்து சிரியா, ஈரான். அதனால் இத்திட்டம் இப்போது கேள்விக்குறியாகியுள்ளது. பலம் குறைந்த எதிரியுடனே இஸ்ரேல் தோற்றுள்ளபோது பலம்பொருந்திய எதிரிகளை எதிர்கொள்வது எப்படி.

---

(03ம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:** இவை யுத்தத் தந்திரங்கள் அல்ல சூதுகள். இந்த சூதுகள் தமிழர்களையும், இலங்கை அரசாங்கத்தையும், இலங்கை யிலும், உலகத்திலும் உள்ள ஏனைய மக்களையும் ஏமாற்றவே. அவர்கள் இதை நீண்ட காலமாக செய்துவருவதால் அவர்கள் உபயோகம் அற்றவர்களாக மாறிவருகின்றார்கள். எல்லா மக்களும் எல்லா நேரமும் மடையராக்கப் படமுடியாது. சூதுகளாலும், துவக்குகளாலும் ஈழத்தை அடையலாம் என அவர்கள் எண்ணுகின்றார்கள். இந்த வழி பயனற்றது என்பதை அவர்கள் விரைவில் விளங்கிக் கொள்வார்கள்.

**கேள்வி:** புலிகளின் பகுதிகளில் பொதுமக்களுக்கு ஏன் பயிற்சி வழங்கப்படுவதாக நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

**பதில்:** உணவுப்பங்கீடுகளைச் சார்ந்திருக்கும் ஏழைக் கிராமத் தவர்கள் பயமுறுத்தி சம்மதிக்கச் செய்யப்பட்டு கட்டாயப்படுத்தி இப்பயிற்சிகளில் ஈடுபடுத்தப் படுகின்றார்கள். இது மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிரித்த கதையாகவுள்ளது. பிரபாகுழு தமிழர்கள் யுத்தத்தில் தமக்கு ஆதரவாக சண்டையிடுவதாகக் காட்டுவதற் கும் பிரபாகுழு இழிவான கொள்கைகளுக்கு ஆதரவு வழங்குவதாகக் காட்டுவ தற்கும் மீண்டும் ஒரு தடைவ தமக்கு பரீட்சயமான வஞ்சக வழியில் செல்கின்றனர்.

நாஸிஸ ஜேர்மனிக்கு என்ன நடந்தது? மேலும் அதனைத் தொடர்ந்து கிழக்கு ஜேர்மன் அவிழ்க்கப்பட்டுள்ளது. பிரபாகரன் என்ன முயற்சிகளை அதிகரித்துச் சென்றாலும் பொய்யை உண்மை யாக்க முடியாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் அவல வாழ்க்கை.

கிழக்கான்

வடக்கும் கிழக்கும் இன்று எரிமலையாய் வெடிக்கிறது
வரண்டுபோன நிலமாக எங்கள் சிறப்பிடம் இருக்கிறது
தெருவெல்லாம் பிணமாகக் கொட்டிக் கிடக்கிறது
தெப்பக் குளம்போல ரத்தம் தேங்கி வழிகிறது

மக்களின் இருப்பிடம் இங்கு மணலாகக் குவிகிறது
    மரத்தடி நிழல்கூட எமக்குத் தடையாக இருக்கிறது
நடக்கின்ற பாதைகள் இங்கு தணலாக எரிகிறது
    நடுத் தெருவுக்கு வந்த மக்கள் நாதியற்று நிற்கின்றது

தப்பிப் பிழைத்த தர்மம் இங்கு செத்துக் கிடக்கிறது
    தட்டடிப் பறிக்க நினைத்த கை வெட்டிக் கிடக்கிறது
சப்பித் தின்ட துண்டுகளில் இங்கே மிச்சம் இருக்கின்றது
    சண்டையிட்ட புலிகள் கூட இன்னும் நக்கித் திரிகின்றது

தூக்கம் மறந்த கண்கள் எமக்கு சுமையாகத் தெரிகிறது
    தூக்கி வளர்த்த பிள்ளை இன்று எமனாக வருகிறது
பிறந்து வளர்ந்த இடம் எமக்கு சுடுகாடாய் மாறியது
    பித்துப் பிடித்துப்போய் மக்கள் பேயாடித் திரிகிறது

பிறப்புப் பதிவில் மட்டும் பெயர்கள் இருக்கிறது
    பிறந்த இடம் ஏனோ சிதைந்து கிடக்கிறது
வீதியோர வாழ்க்கைக்கு முகவரி எங்கே இருக்கிறது
    வீசுகின்ற காற்றும்கூட எம்மிடம் பேரம்பேசுகிறது

இன்று நேற்று அல்ல இந்த யுத்தம் தொடர்வது
    இருந்த மானம் கூட காற்றில் எங்கோ பறந்தது
சொத்து சுகம் அத்தனையும் சுக்குநூறாய்ப் போனது
    சொல்லிக் கொள்ள யாருமின்றி சோகம்கூடத் தொடருது

ஆடிமாதம் 83 எமக்கு அனுமதி கொடுத்தது
    ஆசி பெற்ற அகதிகளாக எமது பயணம் தொடர்ந்தது
கலவரம் என்று காரணங்காட்டி கண்ணீர் வடித்தது
    கற்பனையல்ல நிஜமே என்று உள்மனம் உணர்ந்தது

ஏழு வருடம் கழித்து மீண்டும் வன்முறை வெடித்தது
    எம் உரிமை கொடுக்க மறுத்து விரட்டியடித்தது
பேரினவாதம் உடைக்கப்பட்டு சுருண்டு படுத்தது
    பேட்டை ரவுடி ஆட்டங் காட்ட மக்கள் அகதியானது

பேரைக் காட்டி பேரை மாற்றி இடங்கள் மாறியது
    போதை கொண்ட புலிகள்மட்டும் இரத்தம் தேடியது
அகதி என்ற பெயரில் நாங்கள் அலைந்து திரிவது
    அன்றுதொடக்கம் இன்றுவரை தொடரும் கதையிது

உணர்வைத் தவிர எங்களிடம் மிச்சமென்ன இருக்கிறது
    உயிரைக் கூடப் புலிகளுக்கு பிச்சைதானே கொடுத்தது
தமிழ் ஈழம் கிடைக்குமென்பது இச்சை கொட்டி வாழ்ந்தது
    தமிழரான எங்களுக்கே புலி கட்டை தட்டிப் பார்க்கிறது

அன்புடன் வாசகர்களுக்கு

உள்நாட்டிலும், புலம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான எமது வாசகர்களின் நீண்டநாள் வேண்டுகோளுக்கிணங்க அடுத்துவரும் தமிழ் அலை இதழில் கேள்வி பதில் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் கொள்கைகள், இலக்குகள், சமகால அரசியல் தொடர்பான எமது பார்வை போன்றவற்றின் வாசகர்களின் வினாக்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

தமிழ் அலை கேள்வி பதில்
மீனகம்
இல,39 கோவிந்தன் வீதி
மட்டக்களப்பு

மின்னஞ்சல் முகவரி tamilalainews@yahoo.com





பிரபா குழுவின் வடமுனை முகாம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவின் அதிரடித் தாக்குதலில் இலக்கான சமயம் பிரபா குழுவின் முகாமிலிருந்து ஆயுதங்கள் எடுக்கப்படுவதையும், பிரபா குழுவுக்குச் சொந்தமான வாகனம் ஒன்று தீப்பற்றி எரிவதையும் படத்தில் காணலாம்




தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் செயலகத் திறப்பு நிகழ்வின்போது



மட்டக்களப்பு மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் அவர்களுடன் கலந்துரையாடியபோது

உண்மைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது
உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி www.tamilalai.org
எமது பத்திரிகை மற்றும் இணையத்தள தொடர்புகளுக்கும்
விமர்சனங்களுக்கும் tamilalainews@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org